REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2024 மார்ச் 6 புதன்கிழமை
வரு. 92 இல. 57
Wednesday 06, March, 2024
20 பக்கங்கள்
50/-

**தரம் 01 முதல் 5 வரையிலான**

## பாடசாலை மாணவர்களுக்கான இலவச மதிய உணவுத் திட்டம்



அரச பாடசாலைகளில் தரம் 01 முதல் 5 வரையிலான மாணவர்களுக்கான 'பாடசாலை உணவுத் திட்டம்' நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

06

## திறந்த விசாவில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதை உடனடியாக தவிர்க்கவும்



**மியன்மாரில் தடுப்பில் உள்ளவர்களை மீட்க இராஜதந்திர பேச்சு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

திறந்த விசா மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்ல வேண்டாம் என்றும் போலி இடைத்தரகர்களின் வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு தொழில் வாய்ப்புகளை தேடிச் சென்றுள்ளவர்களில் சிங்கள மொழி தெரியாதவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மியன்மார் சைபர் கிரைம் பயங்கரவாத குழுவால் தடுத்து

06

**சீதாவக்க பகுதியில் அருங்காட்சியகம்**

## ரயில்வே இல்லத்தில் நிர்மாணிக்க முடிவு



சீதாவக்க பகுதியில் அருங்காட்சியகத்தை நிறுவ அமைச்சரவை அனுமதித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் (05) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். இங்கு பேசிய அமைச்சர்:

ஐரோப்பியர்களுக்கு இலங்கையில் அதிக தோல்விகளை ஏற்படுத்திய யுத்த தந்திர மிக்க இடமாக சீதாவக்க பிரதேசம்

06



**06 உணவுப் பொருட்களின் விலைகள் இன்று நள்ளிரவு முதல் குறைப்பு**

## ஸ்ரீமத் பகவத் கீதையின் பிரதி சபாநாயகருக்கு கையளிப்பு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஸ்ரீமத் பகவத் கீதையின் பிரதி 04ஆம் திகதி பாராளுமன்றத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. கடந்த 01 முதல் 04 வரை கொழும்பில் நடைபெற்ற சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதைப் பெருவிழாவின் நிறைவைக் குறிக்கும் வகையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்

06



**அரசாங்க பாடசாலைகளில் வழங்கப்படும் ஒருவேளை உணவு**

# ஆரம்ப பிரிவு மாணவர்களின் உணவுக்கான தொகை அதிகரிப்பு

**ஒரு மாணவருக்கான ரூ.85 இனி 110 ரூபாவாக வழங்கப்படும்**



### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவிப்பு

அரசாங்க பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்காக ஒரு வேளை உணவுக்காக வழங்கப்படும் தொகையை 110 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதுவரை காலமும் மாணவர்களின் ஒரு வேளை உணவுக்காக 85 ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (05) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சரவையின் தீர்மானத்தின்படி, ஒரு மாணவருக்கு செலவிடப்படும் தொகையை 110 ரூபாவாக அதிகரிப்பதற்கும்

06

## பாடசாலைகளை அரசியலுக்கு பயன்படுத்த முற்றாகத் தடை

**மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்பு**

பாடசாலைகள் மற்றும் பாடசாலை வளாகங்களை அரசியல் மேடைகளாக பயன்படுத்துவதை உடனடியாக தடை செய்யுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண ஆளுநர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (05) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே

06

## சரசவிய விருது விழா 2024: 06 வருடங்களின் பின் மீண்டும்



அச்சு ஊடகங்கள் மிகவும் வீழ்ச்சியடைந்து கடுமையான சவால்களை எதிர்நோக்கி வரும் இவ்வேளையில், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதாக லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தெரிவித்தார். 35ஆவது சரசவிய சினிமா விருதுகள் வழங்கும் விழா குறித்து நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழா, இம்மாதம் (28) ஆறு

06

## வடக்கு சுகாதார பிரச்சினைகளுக்கு எதிர்வரும் சில மாதங்களுக்குள் தீர்வு

**வடக்கு ஆளுநரிடம் சுகாதார அமைச்சர் உறுதி**



வட மாகாணத்தில் இதுவரை நிரப்பப்படாத ஆளணி மற்றும் ஆளணி வெற்றிடங்களுக்கான மாற்றீடுகள் தொடர்பில் எதிர்வரும் சில மாதங்களுக்குள் தீர்வு பெற்றுத்தரப்படுமென வடமாகாண ஆளுநரிடம், சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன உறுதியளித்துள்ளார்.

வடமாகாண சுகாதார துறையினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில்

06



**06 சிபெட்கோ, ஐ.ஓ.சி, சினோபெக் எரிபொருள் விலைகளில் திருத்தம்**

**95 ஒக்டேன் 09 ரூபாவால் குறைப்பு**

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

## தீர்ப்பு மேலும் தாமதமானால் பாராளுமன்றம் ஊடாக விசாரணை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆசிரியர் போட்டிப் பரீட்சை தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒரு வருடத்திற்கு மேல் தாமதமாவதால் 43 இலட்சம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு விதித்து ஒருவருடமாகும் நிலையில், அதற்கான தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை என சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், மேலும் தாமதமானால் பாராளுமன்றத்தின் ஊடாக அதற்கெதிராக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.


எதிர்க்கட்சித் தலைவர் தமது கேள்வியின் போது,

தம்புள்ளை தேர்தல் தொகுதியிலுள்ள தேவஹுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 38 வருடங்களாக கணித ஆசிரியர் ஒருவர் இல்லை. அவ்வாறே புத்தள

06

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை பிரதி செயலாளர் நாயகத்திடம் கையளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதனோடு இணைந்த கூட்டுக் கட்சி உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி மற்றும் சுயாதீன எதிரணி

06

## எச்சரிக்குமளவுக்கு வெப்பநிலை உயரும்

**நாட்டின் பல பகுதிகளில் எச்சரிக்கும் அளவுக்கு வெப்பநிலை அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. வடமேல், மேல் மற்றும் தென், சப்ரகமுவ மாகாணங்களிலும், அநுராதபுரம், மன்னார் மாவட்டங்களின் சில இடங்களிலும் வெப்பநிலை அதிகரிக்குமென திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறுவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த நிலைமை**

06

## தேர்தல்கள் சவால்களாகவே இருக்கும்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் மக்களை ஏமாற்றுவதில்லை என, கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஷில்ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பிய அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார். ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த பஷில் ராஜபக்ஷ;

தமது கட்சி ஒருபோதும் மக்களை ஏமாற்ற முயற்சிக்கவில்லை. தேர்தல்கள் சவாலாகவே இருக்கப் போகின்றன. மீண்டும் பாராளுமன்றம் செல்லும் எண்ணமில்லை. எந்தத் தேர்தல்

06



## பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைக்கு ஜனாதிபதி ரணிலின் காலத்தில் தீர்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக பெருந்தோட்ட மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் தீர்வு கிடைக்கும் என்ற திடமான நம்பிக்கை உள்ளதாக, வடிவேல் சுரேஷ் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலையக மக்களுக்கு பல்வேறு அநீதிகள்

06

## இலங்கை கடற் பரப்புக்குள் எல்லை தாண்ட வேண்டாமென எச்சரிக்கை

**மீனவர் நலனில் தமிழக நலத்துறை அவதானம்**

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிக்க செல்ல வேண்டாமென தமிழ்நாடு மீனவர் நலத்துறை, தமிழக மீனவர்களுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கை மீனவர்கள் நடத்தும்

06

## சாந்தனின் உடல் எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் நல்லடக்கம்



**சாந்தனின் உடல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லமயான வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில், பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு முப்பது வருடங்களுக்கு மேலாக**

06

## இரண்டு ஆண்டு கால ஜனாதிபதியின் வகிபாகம்

**"Press Vs. Prez" நூல் நாளை வெளியீடு**

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறும் கடினமான பணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முக்கியமான வகிபாகத்தை கேலிச்சித்திரக் கலைஞர்கள் எப்படி நோக்கினர் என்பதை வெளிப்படுத்தும் "Press Vs. Prez" நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாளை (07) மாலை 4.00 மணிக்கு கொழும்பு தாமரைத்தடாக

06

# நகர்வலம்



## முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரபுக்கு வாழ்நாள் விருது



(அஷ்ரப் ஏ சமட்)

இலங்கை நாட்டிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் ஆற்றிய சேவையினை கௌரவிக்குமுகமாக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் 'IMRA' வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வு கொழும்பு ஷங்ரிலாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். இலங்கை முஸ்லிம் பெண் ஆளுமைகளையும் சாதனைகளையும் கௌரவிக்கும் பொருட்டு அகில இலங்கை முஸ்லிம் பெண்கள் அமைப்புடன் இணைந்து டெனாரா பயிற்சி நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்த விருது வழங்கும் விழாவிலேயே இவ்வாறு அவர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# சுருட்டுக் கடையைக்கூட நடத்தாதவர்கள் நாட்டை ஆட்சி செய்ய ஆசைப்படுவது எப்படி

### அமைச்சர் பந்துல குணவர்தன

ஹோமாகம மேற்கு ஹொரகல விமலதிஸ்ஸ மாவத்தையிலிருந்து கிழக்கு ஹொரகலை வரையிலான வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இரண்டாயிரம் கோடி ரூபா செலவில் நாடு பூராகவும் 1500 கிலோமீற்றர் வீதிகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இந்த அபிவிருத்திகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பமானது

நீண்ட காலமாக இவ்வீதி புனரமைக்கப்படாதிருந்தது.

இதனால்,மாணவர்கள் மற்றும் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இந்நிலைமைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், பிரதேச விஹாரையை சேர்ந்த தேரர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண பணிப்பாளர், ஹோமாகம உள்ளூராட்சி சபையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள், பிரதேச மக்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய அமைச்சர்:



பழுதடைந்த வீதிகளை புனரமைக்கும் பணிகள் கடந்த மூன்று வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. வெளிநாட்டுக் கடன்களால் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், திடீரென ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிகள், இப்பணிகளைப் பாதித்தன. அரசாங்கத்தை பாரமெடுக்க ஆசைப்படும் அரசியல்வாதிகள் நாட்டின் எதிர்காலத் திட்டம் பற்றி எதையும் சொல்வதாக இல்லை.பொருளாதார வீழ்ச்சியின் போதும் மக்களுக்குத் தேவையான சகலதையும் அரசாங்கம் செய்தது. வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட நிதியுதவிகள் மற்றும் கடன்களாலே இவை,செய்யப்படுகின்றன.

ஆனால், சில அரசியலவாதிகள் மக்களின் வரிப்பணத்தால் இவற்றைச் செய்வதாக விமர்சிக்கின்றனர். பிரச்சினைகளை தனியாக தீர்க்கும் சக்தி எவருக்கும் கிடையாது. சுருட்டுக் கடையைக் கூட நடத்தாதவர், ஆட்சி செய்ய ஆசைப்படுவது எந்த வகையில் நியாயம். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# அநுராதபுரம் மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

### பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் நடவடிக்கை

(கெகிராவ குறுப், அநுராதபுரம் மேற்கு தினகரன், நிருபர்கள்)

அநுராதபுரம் மாவட்டத்தில் 150 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளை விருத்தி செய்வதற்கு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் மேற்கொள்வதற்கு அவர் திட்டமிட்டுள்ளார்.

குறித்த ஒதுக்கீட்டில் இருந்து 1 மில்லியன் முதல் 10 மில்லியன் வரையிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. இதன் முதல்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 4 பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீட்டு அனுமதிப்பத்திரங்கள் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



இதனடிப்படையில் நொச்சியாகம அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம், அங்குநொச்சி அல்மாஸ் முஸ்லிம் மகா வித்தியாலயம், கட்டியாவ முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் தேவநம்பியதிஸ்ஸபுர முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு 5 மில்லியன் பெறுமதிமிக்க வகுப்பறை கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீட்டு அனுமதிப்பத்திரங்களை அவர் வழங்கியுள்ளார்.

### எந்தவொரு பொருளாதார கஷ்டம் வந்தாலும்

# மாணவ மாணவிகள் கல்வியை ஒருபோதும் கைவிட வேண்டாம்

### கிண்ணியாவில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண



எந்தவொரு பொருளாதார கஷ்டம் வந்தாலும் மாணவ, மாணவிகள் கல்வியை கைவிடக் கூடாது. கல்வியில் தான் எமது எதிர்காலம் உள்ளது என பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சான் கேனி NAMS உயர் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி முஸ்தப் முகமட் ஏற்பாட்டில் கல்வி உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே பேராசிரியர் திஸ்ஸவித்தாரண மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

நாட்டின் எதிர்காலம் இன்று கேள்விக்குரியாகியுள்ளது. மாணவ, மாணவிகளுக்கு சரியான கல்வித் திட்டம் இல்லாமையால் இன்று சமூக சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன. அதனால் கல்வியை கைவிடாது அதனை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். எவ்வாறான கஷ்டங்கள் வந்தாலும் கல்வியை கைவிட முயலும் மாணவ, மாணவிகளுக்கு லங்கா சமசமாஜக் கட்சி அதற்கான மாற்றுவழியை ஏற்படுத்தி கொடுக்க தயாராகவுள்ளது.

நான் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சராக இருந்த காலத்தில் விஞ்ஞான பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அதன் மூலம் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நவீன தொழில் நுட்பம் ஊடாக பொருளாதார வளப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது நான் அந்த அமைச்சு பதவியில் இல்லாததால் அத்திட்டங்கள் எவ்வாறு இருக்கின்றது என்று எனக்கு தெரியவில்லை.

எமது கட்சி தமிழ், சிங்களம், முஸ்லிம் இனங்களுக்கிடையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் கட்சியாக செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் லங்கா சமசமாஜகட்சி சார்பில் மூவினத்தையும் சார்ந்தவர்களை சம அமைப்பாளர்களாக நியமிக்கவுள்ளோம் என மேலும் அவர் தெரிவித்தார்.

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கைதி தப்பியோட்டம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மனைவியை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர். எப்பாவல பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் ஒருவரே தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபர் சில வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியை கொலை செய்தமை தொடர்பில் நீதிமன்ற உத்தரவில் அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றில் இவர் சம்பந்தமான வழக்கு இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.







கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் அண்மையில் பஜனை பரிசளிப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியை சுலோக்சனா பாலசுப்பிரமணியம் வரவேற்கப்படுவதையும் ஆலய முகாமையாளர் லோகநாதனும் திருமதி பாலசுப்பிரமணியமும் பஜனை ஏற்பாட்டாளர் குணசீலனும் பரிசுகளை வழங்குவதையும் தர்மகர்த்தா சபைத்தலைவர் சிற்றம்பலம் செட்டியார் பஜனைக்குழுவினருடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படம்: ராஜா)

# குவைத் மரதன் போட்டியில் இலங்கை மாணவன் முதலிடம்

"Gulf BankKuwait" ஏற்பாட்டில் கடந்த (02) நடாத்தப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டப் போட்டியாளர்கள் கலந்து கொண்ட மரதன் ஓட்டப் போட்டியில் 18 வயதுக்கு கீழ் பிரிவில் குவைத்தில் கல்வி கற்கும் இலங்கை மாணவன் மொஹமட் ஷீராஸ் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.



இலங்கையின் தர்கா நகரைச் சேர்ந்த மொஹமட் ஷீராஸ் மற்றும் திருமதி மஹ்ரூசா கலீல் தம்பதிகளின் புதல்வன் மொஹமட் ஷீராஸ் கல்வியிலும், விளையாட்டிலும் குவைத்தில் திறமை காட்டி வருகிறார். பாடசாலை மட்டங்களிலான பல்வேறுபட்ட தடகள போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும் இவர் வென்றுள்ளார்.

இந்தப் போட்டிக்கு ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர். இளைஞர் விவகாரங்களுக்கான அமைச்சர் தாவூத் மராஃபி விளையாட்டு வீரர்களை பாராட்டி உற்சாகப்படுத்தினார்.

# சீனன்கோட்டை ஜாமிஅத்துல் பாஸிய்யாவில் 'ரமழானை வரவேற்போம்' நிகழ்வு



பேருவளை சீனன்கோட்டை அல் ஜாமிஅத்துல் பாஸிய்யத்துஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் "புனித ரமழானை வரவேற்போம்" எனும் தொனிப் பொருளில் விசேட நிகழ்ச்சிகள் அண்மையில் மாணவர்களின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது.

கலாபீட பணிப்பாளர் மௌலவி எம்.ஜே.எம். பஸ்லான் (அஷ்ரபிபீ.ஏ) யின் வழிகாட்டலின் கீழ் கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு அதிபர் மௌலவி எம்.அஸ்மிகான் (முஅய்யதி) தலைமை வகித்தார்.


புனித ரமழானை நல்ல அமல்களைக் கொண்டும் தான தர்மங்களைச் செய்தும் அலங்கரிப்போம் என்ற மகுடத்தில் அதிபர் விசேட உரையாற்றினார்.

மாணவர்களது பல்வேறு நிகழ்ச்சிகளும் இதன் போது இடம்பெற்றன.

இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், கலாபீட உறுப்பினர்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

# 'சிறுவர்களுக்கான படப் புத்தகத்தை உருவாக்குதல்' பயிற்சி முகாம் –2024

'சிறுவர்களுக்கான படப் புத்தகத்தை உருவாக்குதல்' தொடர்பான பயிற்சி முகாம் 2024 சிறுவர் புத்தகங்களுக்கான தேசிய கூட்டமைப்பால் மிக விரைவில் நடத்தப்படவுள்ளது.



கல்வி வெளியீடுகளுக்கான ஆலோசனை சபை, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை றூம் டு றீட் நிறுவனம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி முகாமில் பங்குபற்ற விருப்பமுடையவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

storysi@RoomtoRead.onmicrosoft.com எனும் மின்னஞ்சல் முகவரியினூடாகவோ, 0771539031 மற்றும் 766910602 எனும் வட்ஸ்அப் இலக்கத்தினூடாகவோ அல்லது 0768254721 எனும் கையடக்கத் தொலைபேசியினூடாகவோ தம்முடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# அசறிக்கம மு. வித்தியாலயத்தில் இன்று இல்ல விளையாட்டு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி இன்று (06) பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அல் கமர், அஷ் ஷம்ஸ், அந் நஜ்ம் ஆகிய மூன்று இல்லங்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு, இறுதி நாள் நிகழ்வு அதிபர் ஏ.எம். நியாஸ் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இன்று மாலை 03.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 6 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

ஸுபஹ் - 05.04
ழுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் மாசி 23

ராகுகாலம் : பகல் : 12.25 - 1.55வரை
சுபநேரம் : மாலை : 4.55 - 6.25வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

### உண்மையைக் கூறியே நாம் அரசியல் செய்வோம்

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள மேலும் ஒரு வருடமாகலாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்கு குறைந்தது மேலும் ஒரு வருடங்களாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தால் நாடு இயல்பு நிலைக்கு திரும்புவதாக தெரிவித்த அவர், பொருளாதார நிலைமை தொடர்பில் மக்களிடம் உண்மையைக் கூறியே அரசியல் செய்வோம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம்,நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச் சட்டமூலம்,) உள்ளிட்ட சில சட்டமூலங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களால் நாட்டு மக்கள் குறுகிய கால நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். இதனை எதிர்க்கட்சிகள் தமது அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்திக் கொள்வதை காண முடிகின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நீண்டகால திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.கடந்த 18 மாதங்களுக்கு முன்னர் நாட்டில் நிலவிய நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து நாட்டின் நிதி முறைமை உறுதியாக பேணப்பட்டு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அரசாங்க வருமானம் 11 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு கட்டம், கட்டமாக தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எரிபொருள்,எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு காணப்பட்டது.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தவுடன் வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை அதிகரித்தவுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள முடியும் என்று குறிப்பிடுவது பொருளாதார முகாமைத்துவ கொள்கைக்கு பொருத்தமற்றது.அரசியல் நோக்கத்துக்காக பொருளாதார விடயங்களில் பொய்களை வெளியிட முடியாது. அதே வேளை, மக்களை தவறாக வழிநடத்தவும் முடியாது.

அனுரகுமார திசாநாயக்க எம்பியின் பேச்சுக்களை நோக்கும்போது அவரது பொருளாதார கொள்கையை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது.பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வு காணாமல் இருந்திருந்தால், அது மக்கள் விடுதலை முன்னணிக்கு சாதகமாக அமைந்திருக்கும். எனவேதான், தற்போதைய பொருளாதார நிலையை மக்கள் விடுதலை முன்னணியினர் கடுமையாக விமர்சிக்கின்றனர்.ஜனாதிபதியின் தீர்மானங்களால் நாடு சற்று இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தவக்கால சிந்தனை



## இயேசுவின் அன்புக்கு சாட்சிகளாவோம்

“திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேனென்று எண்ண வேண்டாம். அழிக்கவன்றுநிறைவேற்றவே வந்தேன்.”

ஒரு நற்செய்திப் பாடல் வரிகள் விடுக்கின்ற அழைப்பானது இயேசு உரையாடியது நடந்து கொண்டது போன்று நமது வாழ்வினை “இன்னும் சற்று ஆழமாகத் தோண்டுங்கள்” என்பதாகும். இன்றைய நற்செய்தியில் இயேசு தன் சீடர்களுக்கு விடுக்கின்ற அழைப்பானது “இன்னும் சற்று ஆழமாகத் தோண்டினால்” சீடர்கள் இயேசுவே கடவுளின் கட்டளைகளினதும், பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களின் வார்த்தைகளின் நிறைவும் ஆவார் என்பதைக் கண்டுகொள்வார்கள்.

அதுமட்டுமல்லாத இயேசு தன் சீடர்களுக்கு விடுக்கின்ற மேலதிக அழைப்பு என்னவெனில் அவர்கள் ஒவ்வொருவரும் அவர்களது வாழ்வில் கடவுளின் கட்டளைகளையும் படிப்பினைகளையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பின்பற்ற வேண்டும் என்பதாகும்.

இயேசுகிறிஸ்து தமது போதனை, கற்பித்தல், சுகமளித்தல், பாவங்களை மன்னித்தல் போன்ற செயற்பாடுகளில் தனது பணி குறித்து தெளிவாக கற்பிப்பது யாதெனில், இறைவாக்கினர்களின் வார்த்தைகளையோ, மோசேயின் சட்டங்களையோ அழிக்க வரவில்லை என்பதாகும்.

அவரது சித்தமெல்லாம் உள்ளத்தின் சிந்தையினை ஆய்வுக்குட்படுத்தி பரிசீலனை செய்வதாகும்.

இயேசு இறைவாக்குகளையும் திருச்சட்டங்களையும் ஒரே எளிய வார்த்தையில் சுருக்கி அன்பு என்கிறார். இவ்வன்பானது கடவுளையும் அயலாரையும் அன்பு செய்யும் அன்பாகும்.

இயேசுவின் சீடர்களாக நாம் தொடர்ந்தும் அவரது அன்பினை நமது வார்த்தைகளிலும் செயலிலும் வெளிக்காட்ட வேண்டும்.நமது தவக்காலப் பயணத்தினை தொடர்ந்து பயணிக்கின்ற இத்தருணமதில் நாம் உள்ளத்தின், மனத்தின்“ ஆழத்தில் சற்றுத் தோண்டி” இயேசுவின் அன்புக்கு சாட்சிகளாக நாம் வாழும் சமூகங்களில் திகழ வேண்டிய வரம் கேட்போம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

### தேர்தலில் ரணில் மீண்டும் ஜனாதிபதியானால்

# நாட்டின் பொருளாதார, அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டினால், பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமென தாம், நம்புவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு இரு நாள் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்தின் பல்வேறு தரப்பினரது பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

நாடு தற்போதுள்ள சூழ்நிலையில் மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டாலும் அவசியம் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்தார்.எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்திலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை பலப்படுத்துவீர்களாக இருந்தால், இங்கு எமது மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு எம்மால் தீர்வைக் காண முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவானால் பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று நம்புகிறேன்.

06

# கொழும்பிலுள்ள ரயில்வே கட்டடங்கள் அபிவிருத்தி

கொழும்பு நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள பிரதான புகையிரத நிலையங்களின் கட்டடங்களை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2023 நவம்பரில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், கொழும்பு நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் கொம்பனி வீதி ஆகிய புகையிரத நிலையங்களிலுள்ள கட்டடங்களை வர்த்தக நிலையங்களாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தெஹிவளை மற்றும் கல்கிசை ரயில் நிலையங்களை நிர்மாணித்தல், கண்காணித்தல் மற்றும் ஒப்படைத்தல் நடைமுறைகளில், அரச தனியார் பங்களிப்பை தவிர்த்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சு சமர்ப்பித்த கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### பெண்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்கு

# பாரிய பங்களிப்பு வழங்கும் MAS Holdings ஆடைக் கைத்தொழில் நிறுவனம்

தற்போதைய காலகட்டத்தில் அந்நிய செலாவணியை அதிகளவில் பெற்றுத்தரக்கூடிய முதன்மை ஏற்றுமதி நோக்கை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறைகளுள் ஆடைக் கைத்தொழில் பிரதான பங்கு வகிப்பதுடன், ஏற்றுமதி மூலம் பாரிய வருமானத்தை பெற்றுத்தரும் கைத்தொழில் துறையாகவும் ஆடைக் கைத்தொழில் மாறியுள்ளது.

அந்த வகையில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தில் ஆடைக் கைத்தொழில் முதுகெலும்பாக இருந்து வருகின்றது. இலங்கையிலிருந்து தைத்த ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், எமது நாட்டு ஆடைத் தயாரிப்புகளுக்கு உலகில் பாரிய வரவேற்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஆடைக் கைத்தொழில் வளர்ச்சியில் இலங்கை பிரதான நாடாகியது. இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களில் ஆடைத் தயாரிப்புகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஆடைக் கைத்தொழில் நிறுவனங்களும் உருவாகத் தொடங்கின. இலங்கையில் பெரும்பாலான ஆடைக் கைத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் அமைந்துள்ளன.

எமது நாட்டு ஆடைக் கைத்தொழிலில் செல்வாக்கு செலுத்துகின்ற பிரதான காரணிகளாக தொழிலாளர் வசதி, வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பு, முதலீடு ஆகியன உள்ளன. அத்துடன் எமது நாட்டில் தொழிலாளர்களை இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி உள்ளதுடன், இங்கு தயாரிக்கப்படும் ஆடைகளும் தரமானதாக உள்ளதால் வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பும் உள்ளது. எமது நாட்டு ஆடைக் கைத்தொழிலில் பெரும்பாலும் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளதுடன், முதலீட்டாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதி, இடவசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் எமது நாட்டு ஆடைத் தயாரிப்புகளுக்கு அதிக கேள்வி உள்ளதுடன், சர்வதேச சந்தையில் அதற்கு அங்கிகாரமும் உள்ளது. இதனால் ஆடைக் கைத்தொழில், எமது நாட்டு ஏற்றுமதி வருமானம் மற்றும் வர்த்தக நிலுவையில் நேரடி நன்மை பயந்து, நாட்டுக்கு அதிகளவான அந்நியச் செலாவணியை பெற்றுத்தந்து, பொருளாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துகின்றது. அத்துடன் ஆடை ஏற்றுமதிகள் அதிகரித்து, நிலையான வர்த்தக நடவடிக்கைகளை எமது நாடு பேணும் நிலைமையும் உள்ளது.

ஆடைக் கைத்தொழில் வேலை வாய்ப்பில் அதிகளவாக பெண்களே உள்ளீர்க்கப்பட்டவர்களாக உள்ளதுடன், எமது நாட்டிலும் இந்நிலைமை உள்ளது. ஆடைக் கைத்தொழிலில் பங்கேற்கும் பெண்களுக்கு நிலையான, நெகிழ்ச்சியான வேலைவாய்ப்புகள் கிடைப்பதுடன், அவர்களின் மகப்பேறுக் காலத்திலும் பாரிய நன்மைகள் கிடைக்கின்றன.

ஆடைக் கைத்தொழிலால் பெண்கள் தமது குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியான பங்களிப்பை சுதந்திரமாக வழங்குவதுடன், குடும்ப வருமானத்தையும் உயர்த்துகின்றனர். அவர்களின் குடும்ப வருமானம் உயர்வடைவதால் வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது.

ஆடைக் கைத்தொழிலால் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படும் பெண்களுக்கு புதிய தன்னம்பிக்கை பிறப்பதையும் அவதானிக்க முடிகின்றது. ஆடைக் கைத்தொழில் வேலைவாய்ப்பில் பெண்களுக்கு கிடைக்கும் வருமானத்தால், அவர்களின் நுகர்வுத் தேவைகளும் தாமாகவே அதிகரிக்கின்றன. அவர்கள் அதிகளவாக பொருட்களை நுகர்வதால் நாட்டுக்கு அதிகளவான வருமானம் கிடைக்கின்றது. இது எமது நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொருளாதார வளர்ச்சியை உண்டுபண்ணி வருகின்றது. இவற்றின் அடிப்படையில் எமது நாட்டு ஏற்றுமதிகள் அதிகரிப்பதால், வற்வரி வருமானம் பெருமளவாக கிடைத்து, அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் சாத்தியக்கூறு உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு ஆடைக் கைத்தொழிலில் எமது நாடு முன்னேறி வருகையில், கடந்த 2019 டிசெம்பர் இறுதியில் கோவிட்19 தொற்று பரவிய போது, எமது நாடும் அதனால் பாதிக்கப்பட்டதுடன், எமது நாடு 2022 முற்பகுதியில் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. இந்த இரு இக்கட்டான சூழ்நிலைகளிலும் எமது நாட்டு தொழில்துறைகளின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன், பொருளாதார முன்னேற்றத்தில் சரிவை எமது நாடு எதிர்நோக்க நேரிட்டது. இவ்விரு தாக்கங்களும் எமது ஆடைக் கைத்தொழில் பாதிப்புக்கு விதிவிலக்கல்ல. ஆயினும் எமது நாடு கோவிட் 19 தாக்கம், பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்போது மீண்டெழுகையில், ஆடைக் கைத்தொழிலாலும் அதன் பொருளாதாரப் பங்களிப்பு மீண்டும் நாட்டுக்கு கிடைக்க தொடங்கியுள்ளது.

அந்த வகையில் ஆடைக் கைத்தொழில் நிறுவனங்களில் முன்னணி நிறுவனமாக உலகளாவிய ரீதியில் அமெரிக்கா, லண்டன், ஐரோப்பிய நாடுகளில் விளங்கிவரும் MAS Holdings நிறுவனம், மூன்று சகோதரர்களான Mahesh Amalean, Sharad Amalean, Ajay Amalean ஆகியோரால் 1987 இல் நிறுவப்பட்டதுடன், அதன் தலைமை அலுவலகம் கொழும்பின் பத்தரமுல்லையில் அமைந்துள்ளது. இதன் கிளைகள் இலங்கையின் பல இடங்களிலும் உள்ளன.

வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களை இலக்காகக் கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி, வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றும் நோக்கில் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் MAS கிறீடா வானவில் எனும் பெயரில் இதன் கிளை நிறுவனம், கிளிநொச்சியின் அறிவியல் நகரில் இயங்கி வருகின்றது. MAS Holdings நிறுவனத்தில் பிரதானமாக உள்ளாடைகள், ஒய்வு மற்றும் விளையாட்டு ஆடைகள், நீச்சல் ஆடைகள், குத்துச்சண்டை வீரர்களுக்கான ஆடைகள், யோகாவில் ஈடுபடுபவர்களுக்கான ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் சிறப்பம்சமாக ஆடைக் கைத்தொழிலில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு பயிற்சி, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இலங்கையில் அமைந்துள்ள MAS Holdings நிறுவனத்தில் அதிகளவாக பெண்களே பணியாற்றுகின்றனர்.

**MAS Holdings நிறுவனத்தின் கிளிநொச்சி MAS கிறீடா வானவில் கிளையில் பணியாற்றும் தயாபரன் தர்சினி (வயது 36) ஆடைக் கைத்தொழில் தொடர்பான அனுபவத்தையும் MAS கிறீடா வானவில் கிளையில் தான் பணியாற்றுவதால் அடைந்துவரும் நன்மைகளையும் தினகரன் பத்திரிகை வாசகர்களுடன் பகிர்ந்துகொண்ட போது:**

"கிளிநொச்சியின் அறிவியல் நகரை வசிப்பிடமாகக் கொண்ட எனக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். எனது கணவருக்கு நிரந்தர வருமானம் இல்லாமையால், அவ்வப்போது கிடைத்த அவரது வருமானத்தில் எமது குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்துவந்தோம். ஆயினும் அவரது வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. கணவரின் அப்போதைய வருமானத்தில் எமக்கான உணவுத் தேவை, பிள்ளைகளின் கற்றல் உள்ளிட்ட செலவீனங்களை சமாளிப்பதே பாரிய சிரமமாக இருந்தது. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து எமது சொந்த இடத்துக்கு திரும்பிய நாம், மிகவும் ஏழ்மையை எதிர்நோக்கினோம். அப்போது எமக்கிருந்த இக்கட்டான சூழ்நிலையில் எமது குடும்பப் பாரத்தை கணவருடன் இணைந்து தாங்கிப்பிடிக்க நான் எண்ணினேன். வேலை தேடி அலைந்தேன். இதன்போது MAS Holdings நிறுவனத்தின் MAS கிறீடா வானவில் கிளையில் எனக்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது.

2012ஆம் ஆண்டு டிசெம்பரில் MAS கிறீடா வானவில் கிளையில் நான் பணியில் இணைந்தவுடன் எனக்கு MAS Holdings நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அந்நிறுவன மேலதிகாரிகள் தெளிவுபடுத்தியதுடன், நான் நியமனம் செய்யப்பட்ட பணியில் 6 மாதங்களுக்கு சம்பளத்துடன் பயிற்சி வழங்கினர்.

அவ்வாறு வேலையில் இணைந்த போது எனது பிள்ளைகளை பராமரிப்பதற்கு எவரும் இல்லை. ஆயினும் எனக்கு பிள்ளைகளை தனியாக விட்டுச்செல்ல முடியாத நிலைமை இருந்தது. இதன்போது பிள்ளைகளை பாதுகாத்து பராமரிப்பதற்கு MAS கிறீடா வானவில் கிளை எனக்கு கைகொடுத்து உதவியது. MAS கிறீடா வானவில் கிளையில் பணியாற்றும் பெண் பணியாளர்களின் நன்மை கருதி பிள்ளைகளை பராமரிக்கும் நிலையமொன்று அங்கு இயங்கி வருவதுடன், அதில் நான் எனது பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு அலுவலகப் பணியில் கவனம் செலுத்தினேன். இதன்போது MAS கிறீடா வானவில் கிளையின் பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்தில் உணவு, கற்றல் வசதி உள்ளிட்ட சகல சேவைகளையும் வழங்கி மிகவும் உன்னதமாக எனது பிள்ளைகளை பராமரித்தனர். எனது பணி நேரத்திலும் கூட, எனது பிள்ளைகளை எந்நேரமும் என்னால் கண்காணிக்கக் கூடியதாக இருந்தது.

MAS கிறீடா வானவில் கிளையில் ஆடைகளுக்கு அந்தந்த இலட்சினை (Logo) பொறிக்கும் பணியில் நான் இணைக்கப்பட்டேன். அதில் நான் ஆரம்பத்தில் பயிற்சி உறுப்பினராக இணைந்தேன். எனது கடின உழைப்பால் பின்னர் Team Leder, Group Leader ஆகிய படிநிலைகளில் நான் பணியில் உயர்வடைந்துள்ளேன்.

MAS கிறீடா வானவில் கிளையில் நான் வேலை செய்வதால் எனது குடும்பத்துக்கான பொருளாதார தேவைகளை இலகுவில் பூர்த்திசெய்ய முடிவதுடன், எவரிடமும் கடன் கேட்டு நிற்காமல் கௌரவத்துடன் வாழ்கிறேன். எனது பிள்ளைகளையும் கல்வித்துறையில் முன்னேற்றி வருகின்றேன்.

ஒரு குடும்பப் பெண்ணாகிய நான், எனது குடும்ப முன்னேற்றத்துக்கும் கணவருக்கும் ஒத்தாசையாக இருந்து கொண்டு தலைநிமிர்ந்து வாழ்கிறேன். ஆக மொத்தத்தில் MAS கிறீடா வானவில் கிளையால் நான் எனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக உள்ளேன்.

என்னை போன்ற பெண்களுக்கு நான் என்ன கூறுவது என்னவென்றால், நீங்கள் கல்வித்துறையில் முன்னேறும் அதேவேளை, தையல் கலையையும் பழக வேண்டுமென்று கூறுகின்றேன். நேரத்தை வீணே கழிக்காமல் பகுதியளவில் தையல் தொழிலாலும் வருமானம் ஈட்ட முடியும். தையல் தெரிந்த பெண்களுக்கு MAS கிறீடா வானவில் கிளை எப்போதும் கைகொடுத்து உதவுவதுடன், தையல் தெரியாத பெண்களுக்கு MAS கிறீடா வானவில் கிளை பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பை வழங்கத் தயாராக உள்ளது" என்றார். ஆம். ஆடைக் கைத்தொழிலால் உலகளாவிய வர்த்தக உறவை கட்டியெழுப்பி வெளிநாடுகளுடன் வலுவான உறவை பேணுவதற்கு, ஒவ்வொரு பெண்களும் முன்வர வேண்டும். தம்மால் முடிந்தவரை நாட்டுக்கு பொருளாதாரப் பங்களிப்பை வழங்கி நன்மை பயப்பதற்கு எமது நாட்டு ஆண், பெண் இருபாலாருக்கும் MAS Holdings நிறுவனம் வேலை வாய்ப்புடன் பாரிய நன்மைகளை வழங்குன்றமை வரவேற்கப்படுவதுடன், தொழில் வழிகாட்டியாகவும் MAS Holdings நிறுவனம் அமைந்துள்ளமை மிகவும் சிறப்பம்சமாகும்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் ஆனி மாதம் 02நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 23



**குறள் தரும் சிந்தனை**

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்**

அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகொண்டு அருள் பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.

# மக்களுக்கு பெரும் நிவாரணமாக அமைந்த மின்கட்டணக் குறைப்பு

மின் கட்டணம் தொடர்பில் முக்கியத்துவம் மிகுந்த தீர்மானத்தை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இந்தத் தீர்மானம் மக்கள் மத்தியில் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். மின்கட்டணம் குறைப்புக்காக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ள இத்தீர்மானத்தை பாவனையாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இலங்கை மின்சாரசபை சில தினங்களுக்கு முன்னர் மின்கட்டணம் சுமார் 18 வீதமளவில் குறைக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்த மின்கட்டணக் குறைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை மின்சாரசபை சமர்ப்பித்திருந்த யோசனைகள் மற்றும் செலவுத் தரவுகளைப் பரிசீலனை செய்த பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 21.9 சத வீதமாகக் குறைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இது இலங்கை மின்சாரசபை வழங்கிய சிபாரிசினை விடவும் அதிகமாகும்.

மின்கட்டணக் குறைப்புக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கியுள்ள சிபாரிசுகளின்படி, 'மாதாந்தம் 30 அலகுகளுக்கு குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் மின்பாவனையாளர்களிடம் தற்போது அலகொன்றுக்கு அறவிடப்படும் 12.00 ரூபா இதன்பின்னர் 08.00 ரூபாவாகக் குறைக்கப்படும். இது 33.3 சதவீத மின்கட்டணக் குறைப்பு' என்று குறிப்பிட்டுள்ள பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ, '3160 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்பாவனையாளர்களின் மின்கட்டணம் 28 சதவீதத்தினாலும், 6190 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்பாவனையாளர்களின் மின்கட்டணம் 30 சதவீதத்தினாலும் 91 முதல் 180 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்பாவனையாளர்களின் மின்கட்டணம் 24 சதவீதத்தினாலும் 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பாவிக்கும் ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் 18 சதவீதத்தினாலும் மதவழிபாட்டுத் தலங்களுக்கு 33 வீதத்தினாலும் மின்கட்டணம் குறைக்கப்படும்' என்றுள்ளார்.

இந்த அறிவிப்பின்படி, நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் கவனத்தில் கொண்டு இம்மின் கட்டணக் குறைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டுமொரு தடவை மின்கட்டண குறைப்பின் ஊடாகவும் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பலவிதமான நெருக்கடிகளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளானார்கள். குறிப்பாக மின்கட்டண உயர்வு மற்றும் பொருட்களின் விலைகளும் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டன. நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில் மக்கள் பொறுமை காத்தனர். விலை அதிகரிப்புக்கள் குறித்து சகிப்புன்மையுடன் நடந்து கொண்டனர்.

பொருளாதார நெருக்கடியின் போது ஏற்பட்ட அசௌகரியங்கள், நெருக்கடிகள், பாதிப்புக்களின் போது மக்கள் பொறுமை காத்ததை அரசாங்கம் மறந்துவிடவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருப்பதற்கு அமைய நிவாரணங்களும் சலுகைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மார்ச் மாதம் சமையல் எரிவாயு மற்றும் எரிபொருட்களுக்கான விலைகளில் திருத்தம் செய்யப்படவில்லை.

தற்போது மின்கட்டணத்தைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடு மீட்சி பெற்று வருவதற்கு அமைய அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகள் அனைத்தும் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படுபவை. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அதனால் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கப்பட வேண்டும். இதன் போது கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து ஒற்றுமையுடன் செயற்படுவது இன்றியமையாததாகும். அதன் ஊடாக நாடு அடைந்து கொள்ளும் பிரதிபலன்கள் மக்களையே சென்றடையும் என்பதை மறந்துவிடலாகாது.

ஆகவே பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அளிக்கப்படும் ஒத்துழைப்புக்களும் ஆதரவும் மக்களின் நலன்களது மேம்பாட்டுக்காக அளிக்கப்படும் பங்களிப்புக்களே அன்றி வேறில்லை. அந்த வகையில் மின்கட்டண குறைப்பு மக்களுக்கு பாரிய நிவாரணமாக அமையும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டம், சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் அதிகமானோருக்கு காணி ஆவணம்

கடந்த வருடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட யோசனைக்கமைவாக, நிபந்தனைகளற்ற பூரண காணி ஆவணம் வழங்கும் தேசிய வேலைத்திட்டம் தற்பொழுது நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நிபந்தனைகளுடன் கூடிய காணி ஆவணங்களினால் சிரமங்களை எதிர்கொண்ட மக்களுக்கு, நிபந்தனைகளற்ற காணி ஆவணம் வழங்குவதானது அவர்களின் மனங்களில் நிம்மதி தருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் மூலம்மக்கள் இன, மத, மொழி, பிரதேச, அரசியல் வேறுபாடுகளின்றி பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

தேசிய திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு தம்புள்ளையில் அண்மையில் நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் முதலாவது காணி ஆவணம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த முகம்மதுத்தம்பி குழந்தை உம்மாவுக்கு வழங்கி வைக்கப்பட்டதாக பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலக காணிப் பிரிவு துரிதமாகச் செயற்பட்டு, உரிய காணி ஆவணங்களை காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு முதன்முறையாக அனுப்பி வைத்ததன் பயனாக இது சாத்தியமாகியுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, காணிக்கிளை உத்தியோகத்தர்கள், நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர்



மேற்கொண்ட கூட்டு முயற்சியின் பயனாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அதிகமான தொகையினர் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நன்மையடைந்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, விருதுகளையும், பாராட்டினையும் பெற்றுவரும் சம்மாந்துறை பிரதேச செயலகம், காணி உறுதி வழங்கும் வேலைத்திட்டத்திலும் சாதனை நிலைநாட்டியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

காணி கொள்கை மாற்ற வேலைத் திட்டத்தின் முதற்கட்டத்தில், நாட்டில் மொத்தம் 10ஆயிரம் நிபந்தனைகளற்ற பூரண காணி ஆவணம் வழங்கும் இவ் வேலைத்திட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு மாத்திரம் 711 ஆவணங்களுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தன. இத்தொகையில் மொத்தம் 679 பேர் உடனடியாக நன்மையடையும் வாய்ப்பேற்பட்டுள்ளது.


தொடர்ந்தும் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அவ்வப்போது, பொதுமக்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்கவுள்ளதாக நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையில் கடந்த வருடம் நடைபெற்ற சமூகப் பாதுகாப்பு விருது வழங்கும் விழாவில், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான சமூகப் பாதுகாப்பு விருதினை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா பெற்றுக் கொண்டார். அத்துடன், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் கடவுச் சீட்டு வழங்கும் புதிய திட்டத்திற்கான விரல் அடையாள கைரேகை பதிவு செய்யும் பணி சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடந்தவருடம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

**முகம்மட் றிஸான்**
**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

# வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன்

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த படைப்பாளிகளைக் கௌரவித்து ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த பல வருடங்களாக 'இரா. உதயணன் விருதுகளை' வழங்கி வருகின்றன.





கொரோனா பரவல் காரணமாக 2020, 2021, 2022 ஆண்டுகளுக்குரிய விருது வழங்கல் அறிவிக்கப்படாமலிருந்தது. தற்போது அந்த ஆண்டுகளுக்குரிய விருதுகள் யாவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டுக்குரிய 'வாழ்நாள் சாதனையாளர் விருது'க்கு மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான 'வாழ்நாள் சாதனையாளர் விருது' மூத்த எழுத்தாளர் மலரன்னை அவர்களுக்கும், 2022 ஆம் ஆண்டுக்கான விருது மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரனுக்கும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் விழா குறித்த விபரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

மூத்த எழுத்தாளர் இளங்கோவன் சிறுகதை, கட்டுரை, கவிதை, மருத்துவம் ஆகிய துறைகளில் 21 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் 14 நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

கல்லூரிக் காலம் முதல் சுமார் 36 வருடங்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். வடக்கு_கிழக்கு மாகாண சபையில் தகவல் வெளியீட்டுத் திணைக்களம், திட்டமிடல் அமைச்சு, ஆளணிப் பயிற்சித் திணைக்களம் ஆகியவற்றில் பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை, இந்தியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற இலக்கியக் கருத்தரங்குகள், மாநாடுகள் பலவற்றில் இவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதியின் ஹிந்தி மொழிபெயர்ப்பு புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (2012) சிறப்பாக வெளியிடப்பட்டு பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்தொகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு சென்னையில் (2014) வெளியிடப்பட்டது. ஐ. நா. தொண்டராக (UNV UNDP) பிலிப்பைன்ஸ் நாட்டில் (1983_ 1984) மேற்கு மின்டனாவோ மாநில சுயாட்சி அரசின் 'முதல்வர் விருது' உட்பட பல அமைச்சுகளின் விருதுகளையும் பெற்றவர்.

பிலிப்பைன்ஸ் Zamboanga நகரிலிருந்து வெளியாகும் முன்னணி நாளேடு The Morning Times இளங்கோவனின் சமூக அபிவிருத்தி மூலிகை மருத்துவப் பணிகளைப் பாராட்டி ஆசிரியத் தலையங்கம் (1984) எழுதிக் கௌரவித்தது.

பிரான்ஸ் துலூஸ் நகரில் 'இயற்கையும் உடல்நலமும்' என்ற பொருளில் நடைபெற்ற கண்காட்சி கருத்தரங்கில் (1996) இளங்கோவன் சிறப்புரையாற்றினார். இதற்காக பிரான்ஸில் வெளியாகும் முன்னணி நாளேடுகளில் ஒன்று இளங்கோவனைப் பேட்டி கண்டு (1996) 'இன்றைய பிரமுகர்' என எழுதிக் கௌரவித்தது.

இலக்கிய சமூகப் பணிகளுக்காக இளங்கோவன் பெற்ற விருதுகள், பரிசுகள் சில வருமாறு:

★இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் சிறப்பிடம் (1978)

★ இலங்கைக் கலையகம் பிரான்ஸ் வழங்கிய கலை இலக்கிய சமூகப் பணிகளுக்கான விருது, தங்கப்பதக்கம் (1992)

★இலங்கை இலக்கியப் பேரவை இலக்கிய வட்டம் 'இளங்கோவன் கதைகள்' சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான விருது (2006)

★பிரான்ஸ் 'ஆர். ரி. எம். பிறதர்ஸ்' 22 ஆவது கலைத்தென்றல் விழா கலை இலக்கியப் பணிக்கான விருது, தங்கப் பதக்கம்



(2014

★ தமிழ்நாடு சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளை விருது 'இப்படியுமா' சிறுகதைத் தொகுதிக்கானது 2014)

★ இலங்கை அரசின் கலாபூஷணம் விருது (2014)

இலங்கையில் அன்று எழுத்தாளர் கே. டானியல் தலைவராக விளங்கிய மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளராகப் பணியாற்றிய இளங்கோவன், தற்போது 'பாரிஸ் முன்னோடிகள் இலக்கிய வட்டத்தின்' தலைவராகப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

**அசலை**

# கிராமப்புற மாணவர்கள் கல்வி வாய்ப்பை பெறுவதில் எதிர்நோக்கும் சவால்கள்!

கல்வியின் விளைதிறன் கற்றலின் தொடர்ச்சியான ஈடுபாட்டில் தங்கியுள்ளது. மாணவர்கள் பாடசாலைக்கு தொடர்ச்சியாக சமுகமளிப்பதே கல்விக்கான அடித்தளம். அந்த வகையில் மாணவர் வரவும், கல்விச் செயற்பாடுகளில் அவர்களது பங்களிப்பும் ஆரோக்கியமான தன்மையை வெளிப்படுத்துகிறதா? என்பது சமகால எழுவினாவாகும்.

கிராமப்புற மக்களே பொருளாதாரரீதியில் அதிக பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். தங்களது அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையுள் மற்றும் போக்குவரத்து போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

இது கிராமப்புற மாணவர்களின் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக, மாணவர்கள் போக்குவரத்து வசதியின்மையினால் பாடசாலைக்குத் தாமதமாகவே செல்கின்றனர்.

சில வேளைகளில் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையும் ஏற்படுகிறது. இதனால் அம்மாணவர்கள் அன்றைய பாடம் தொடர்பான அறிவைப் பெறுவது கேள்விக்குறியாகிறது. இதனால் அவர்க



ளுக்கு மன உளைச்சல் அதிகரித்து அவர்களது கல்வி பாதிப்படைகின்றது.

இதனால் சமூகத்திலுள்ள சகல உறுப்பினர்களும் விரும்பியோ விரும்பாமலோ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இவர்களில் அதிகமானோர் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் இவ்வாறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் ஏனைய மாணவர்களைப் போன்று சுமுகமாகக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் இடர்படுகின்றனர்.

விரைவான அறிவு விருத்திக்கு சுகாதாரமான உணவும் ,ஆரோக்கியமான உடலும் அவசியமாகின்றன. ஆனால் கிராமப்புறங்களில் இதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகும். அதாவது கிராமப்புற மாணவர்கள் தங்களது குடும்பச் சூழ்நிலை காரணமாக உணவைப் பெற்றுக் கொள்ள முடியாது பசிபட்டினியுடன் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்கின்றனர். இதனால் அவர்கள் கவனச் சிதறல், அவதானமின்மை, கற்றலில் விருப்பமின்மை, மயக்கநிலை போன்ற உடல், உள அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிராமப்புற மாணவர்களுடைய கல்வி பின்னடைவில் காணப்படுவதற்கு பொருளாதார நெருக்கடி பிரதான சக்தியாக விளங்குகின்றது. ஆகவே இவ்வாறான நிலைமைகளை முழுமையாக சீர்படுத்தி முன்னேற்ற முடியாவிடினும் ஓரளவு சீர்படுத்தினால் கிராமப்புற மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த முடியும். இதனால் இவர்களும் எதிர்காலத்தில் கல்விச் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவார்கள். உதாரணமாக ஐன்ஸ்டீன் , அப்துல்கலாம் போன்ற பேரறிஞர்கள் கூட கிராமப்புறங்களில் பல்வேறு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வறுமை நிலையில் வாழ்ந்து தமது முயற்சியினால் எதிர்காலத்தை செம்மைப்படுத்தினார்கள்.

மேலும், இச்சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு அரசு கல்வி மேம்பாட்டுக்காக இலவச உணவு, இலவச சீருடை மற்றும் இலவச பாடநூல் என்பவற்றை வழங்குவதோடு மட்டுமன்றி உயர்தர மாணவர்களுக்கு நிதியுதவியும் வழங்கி வருகின்றது. எனினும், தற்கால நெருக்கடி காரணமாக கல்வி விருத்தி என்பது கிராமப்புற மாணவர்களிடம் சவாலாகவே காணப்படுகிறது.

**பாத்திமா அஸ்ரிபா**
**தரம் 13 (கலைப்பிரிவு)**
**மன்/கொண்டச்சி மு.ம.வி**

# ரூபா 1260 கோடி செலவில் இடம்பெற்ற இந்தியாவின் மிக ஆடம்பர திருமணம்!

உலகம் முழுவதும் மக்கள் தற்போது பேசுகின்ற விடயம் ஒரு திருமண விழாவைப் பற்றியதாகும். இந்தியா மட்டுமின்றி சர்வதேச ஊடகங்கள் முழுவதும் இந்தத் திருமண விழாவைப் பற்றிய செய்திகளைத்தான் நொடிக்கு நொடி ஒளிபரப்பின.

முகேஷ் அம்பானி மற்றும் நீதா அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானி மற்றும் அவரது மனைவி ராதிகா மெர்ச்சன்ட் ஆகியோரின் திருமணமே அதுவாகும். இந்தியாவை மட்டுமன்றி உலகம் முழுவதையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய ஆடம்பர திருமண விழா இதுவாகும். ஆனந்த் அம்பானி_ ராதிகா மெர்ச்சன்ட்டின் திருமணத்திற்கு முந்திய விழா மார்ச் 1 முதல் 3 வரை 3 நாட்கள் நடைபெற்றது.

அம்பானி குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் இந்தத் திருமண விழாவில் கலந்து கொண்டனர். மைக்ரோசாப்ட் நிறுவனர்



பில் கேட்ஸ், மெட்டா தலைவர் மார்க் ஜுக்கர்பெர்க், இவான்கா ட்ரம்ப் மற்றும் உலகின் பல முன்னணி நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள், அரசியல் பிரபலங்கள் என ஒரே இடத்தில் பார்க்க முடியாத உலகின் பல மிகப்பெரிய வி.ஐ.பிக்கள் இந்த ஆடம்பர திருமண விழாவில் கலந்து கொண்டனர்.

இவர்களின் வருகைக்காக 10 நாட்களுக்கு மட்டும் ஜாம்நகர் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இந்த விழாவிற்காகவே கட்டப்பட்ட ஆடம்பர சொகுசு விடுதியில் தங்கினர். அவர்கள் பொப் ஐகான் ரிஹானாவின் பாட்டைக் கேட்டு மகிழ்ந்தனர். இரண்டு மணி நேர நிகழ்வுக்கு $6 மில்லியன் (இந்திய நாணயத்தில் சுமார் ரூ. 52 கோடி) அவருக்கு ஊதியமாக வழங்கப்பட்டது.

இதுமட்டுமின்றி இந்தியாவின் பல உச்ச நட்சத்திரங்கள் இந்த திருமண விழாவில் கலந்து கொண்டு நடனமாடினர். இதன் உச்சக்கட்டமாக பொலிவுட்டின் மூன்று கான்களான ஷாருக்கான், சல்மான்கான் மற்றும் அமீர் கான் ஆகிய மூவரும் ஒன்றாக இணைந்து நடனமாடினார்கள். இந்த கூட்டணியை எந்த திரைப் படத்திலும் கூட பார்க்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டாரான ரஜினிகாந்த் தனது மனைவி மற்றும் மகளுடன் இந்த திருமண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இவ்வளவு பிரம்மாண்டங்கள் நிறைந்த இந்த திருமணம் நிச்சயமாக சிறிய அளவிலான தொகையில் நடந்திருக்காது. ஆனந்த் அம்பானி_ராதிகா மெர்ச்சன்ட்டின் திருமணத்திற்கு முந்திய 3 நாள் கொண்டாட்டங்களுக்கு 1260 கோடி ரூபா செலவாகியுள்ளது.

முகேஷ் அம்பானியின் நிகர சொத்து மதிப்பு 117 பில்லியன் டொலர்கள். உணவுவகைகளின் ஒப்பந்தத்திற்கு மட்டும் 200 கோடி ரூபா செலவாகியுள்ளது. இந்த திருமண விழா இந்தியாவின் மிகவும் ஆடம்பரமான திருமண விழா ஆகும்.

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் திருமணத்தில் என்னென்ன ஆடம்பர நிகழ்வுகள் நடக்கப்போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தினகரன் வர்த்தக உலா

# மலர்ச்சியுடன் நிறைவடைந்த Medicare 2024



புத்தாக்கம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பின் உச்சத்தை வெளிப்படுத்தியவாறு, இலங்கையின் மதிப்பிற்குரிய 13ஆவது National Healthcare Expo தேசிய சுகாதார கண்காட்சியான Medicare 2024 மார்ச் 01 ஆம் திகதி BMICH இல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த பிரமாண்டமான ஆரம்ப விழாவில் சுகாதார அமைச்சர், வைத்தியசர் ரமேஷ் பத்திரண பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

Medicare 2024 கண்காட்சி, மார்ச் 03 ஆம் திகதி வரை 3 நாட்கள் இடம்பெற்றது. National Healthcare Expo, Ayurveda & Herbal Expo, Medical Tourism Expo, Healthy Living Expo என 4 முக்கிய கண்காட்சிகளாக இடம்பெற்ற இக்கண்காட்சியில் பல்வேறு மருத்துவ கருத்தரங்குகள் மற்றும் வணிகம் வணிகம் (B2B) இடையிலான தொடர்பு தளங்கள் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெறன. மருந்து, மருத்துவ உபகரணங்கள், மருத்துவமனைத் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் 130 காட்சிக் கூடங்களைக் கொண்ட இந்த கண்காட்சியானது, பொது மக்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்கள் என 10,000 இற்கும் அதிக பார்வையாளர்களை ஈர்த்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வருட Medicare Expo கண்காட்சியின் பிரதான அனுசரணையாளராக Asiri Health திகழ்ந்தது.

இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திய Medicare 2024 ஏற்பாட்டுக் குழு மற்றும் ஆசிய உடல்நல மன்றத்தின் தலைவரான வைத்தியர் அமல் ஹர்ஷா, "கடந்த தசாப்தத்தில், சுகாதார அமைச்சு மற்றும் எமது அனைத்து பங்காளிகளுடனும் இணைந்து, இந்த நிகழ்வை இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்புத் துறையின் ஒரு சாராம்சமாக என மாற்றியுள்ளோம். இக்கண்காட்சிக்கு அளிக்கப்பட்ட உலகளாவிய மற்றும் உள்ளூர் பாராட்டுகள், சவாலான காலங்களில் 'Medicare 2024' கண்காட்சியை ஏற்படுத்துவதற்கான அசைக்க முடியாத ஆதரவானது, எமது மகத்தான வெற்றிக்கு சான்றாக விளங்குகின்றது.

# பெந்தோட்டை மாணிக்கக்கல் கண்காட்சியில் இளம் மாணிக்க வியாபாரிகள் கௌரவிப்பு

இவ்வருடத்திற்கான (2024) சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி பெந்தோட்டை உல்லா சபுரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்க வியாபாரிகள் உட்பட தொழிலதிபர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இக்கண்காட்சியை சீனன் கோட்டை மாணிக்கக்கல் ஆபரண வர்த்தக சங்கம், இலங்கை மாணிக்கக்கல் வர்த்தக சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் நடாத்தியது. இந்நிகழ்வின் முதல் நாள் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து சிறப்பித்தார். இரண்டாம் நாள் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மூன்றாம் நாளான இறுதிநாள் நிகழ்வில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவும் கலந்து சிறப்பித்ததோடு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்களும் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.





இந்நிகழ்வில் இளம் மாணிக்க வியாபாரிகள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆசியாவின் அதிகளவு முன்னோக்கிய சிந்தனை கொண்ட ஆயுள் வர்த்தக நாமமாக யூனியன் அஷ்யூரன்ஸ் கௌரவிப்பு




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி தீர்வுகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 7ஆவது வருடாந்த காப்புறுதி கௌரவிப்பு (7th Annual Insurance Conclave Awards) விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஆசியாவின் அதிகளவு முன்னோக்கிய சிந்தனை கொண்ட ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம் 2023 (Most ForwardThinking Life Insurance Brand 2023 Asia) எனும் விருதை சுவீகரித்திருந்தது. நியு இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி லிமிடெட் (New India Assurance Company Limited) நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, இன்சூரன்ஸ் அலேர்ட்ஸ் (Insurance Alertss) வலுவூட்டியிருந்தது. தொழிற்துறையின் முன்னோடிகள், புத்தாக்கவியலாளர்கள் மற்றும் துறைசார் பங்காளர்கள் இந்த நிகழ்வில் ஒன்றுகூடியிருந்ததுடன், சர்வதேச மட்டத்தில் காப்புறுதித் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிறுவனங்கள் கௌரவிக்கப்பட்டிருந்தன.

ஆயுள் காப்புறுதி கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதிலும், வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகளிலும் யூனியன் அஷ்யூரன்ஸ் காண்பிக்கும் முயற்சியை இந்த கௌரவிப்பு வெளிப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு தொடர்பாடலிலும் தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன், ஆயுள் காப்புறுதி தொடர்பான மனப்பாங்கை மாற்றி, அணுகுவதில் மாற்றத்தை யூனியன் அஷ்யூரன்ஸ் ஏற்படுத்தியுள்ளது. அதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அணுகல் திறன் மற்றும் வலுவூட்டல் என்பன உறுதி செய்யப்பட்டுள்ளன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில், " புத்தாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், எமது பெறுமதி வாய்ந்த காப்புறுதிதாரர்கள் மத்தியில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் நாம் ஆற்றும் பங்களிப்பு இந்த கௌரவிப்பினூடாக மீளுறுதி செய்யப்பட்டுள்ளது. எமது வாடிக்கையாளர்களின் தேவைகளுடன் பொருந்தும் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்பையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். " என்றார்.

# அதிநவீன Caching Platformஐ செயல்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் இணைய அனுபவங்களை மேம்படுத்தும் Airtel

உள்ளடக்க விநியோக வலையமைப்பு (Content delivery network CDN) சேவை வழங்குநரான 'DataCamp Limited' உடனான தொலைத்தொடர்பின் முக்கிய கூட்டாண்மையைத் தொடர்ந்து Airtel Lanka பாவனையாளர்கள் குறிப்பிடத்தக்க வகையில் சீரான மற்றும் வேகமான மொபைல் இணைய அனுபவத்தை அனுபவிக்க முடியும்.

இந்த கூட்டாண்மை மூலம், Airtel Lanka இப்போது DataCamp இன் CDN77 Caching Platformஐ வன்பொருள் மற்றும் மென்பொருள் தீர்வுகள் உட்பட, அவர்களின் மாளிகாவத்தை மற்றும் கடவத்தை தரவு மையங்களில் 60Gbps வரையிலான Trafficஐ கூட்டாக கையாளும் திறனை அவர்களுக்கு கொடுக்கிறது.

CDN77 தரவு மையங்கள் மற்றும் Airtel Lanka போன்ற சில மொபைல் ஆபரேட்டர்கள் மத்தியில் Cache Platformகளை உலகம் முழுவதும் பயன்படுத்துகிறது. இதன் விளைவாக, இறுதிப் பாவனையாளர்களின் சாதனங்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது, இதன் விளைவாக வாடிக்கையாளர்களுக்கு வேகமான, மென்மையான மற்றும் நம்பகமான நெட்வொர்க் தர அனுபவங்கள் கிடைக்கும் தகவல் மையமாக இது அமையும்.

"Airtel Lankaவில், எங்களின் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பை அதிகரிப்பதற்கான புதிய வழிகளை நாங்கள் தொடர்ந்து தேடுகிறோம்.

எங்களின் Physical Network உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதோடு, Airtel வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கக்கூடிய மதிப்பை மேலும் மேம்படுத்த, TechTelco சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள மற்றவர்களுடன் உத்திரீதியாக பங்குதாரர்களாகவும் ஒத்துழைக்கவும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

"DataCamp உடன் இணைந்து CDN77 Platformஐ நாங்கள் வெளியிடுவது இந்த அணுகுமுறையின் மற்றொரு எடுத்துக்காட்டு, மேலும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் மொபைல் இணைய அனுபவத்திற்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை வழங்குவது உறுதி" என்று Airtel Lanka CEO/MD, அஷிஷ் சந்திரா கூறினார்.

# 'தீவா கரத்திற்கு வலிமை': தொழில்முயற்சியாண்மைத் திறன் விருத்தி நிகழ்வின் வெற்றியாளர்கள் யாழில் கௌரவிப்பு



20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையின் பெருமைக்குரிய வர்த்தக நாமமான தீவா (DIVA), 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில் முயற்சியாண்மைத் திறன் விருத்தி நிகழ்வில் சிறந்து விளங்கிய வெற்றியாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விருது வழங்கிக் கௌரவித்தது. Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது. மிகக் கவனமான மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றின் பின்னரே குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச் சிறந்து விளங்கிய நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு அனைவரும் முகங்கொடுத்துவரும் நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களில் ஈடுபடும் தொழில் முனைவோர், நாட்டின் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி நாட்டை பொருளாதார வளர்ச்சியை நோக்கி வழிநடத்தும் சக்தியாக உருவெடுத்துள்ளனர். எமது இல்லத்தரசிகளும் தமது வீட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியவாறே தொழில்முனைவோர்களாக உருமாறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பெண் தொழில் முனைவோரின் இவ்வாறான அசாத்திய திறமைகளை இனங்கண்டு அவரகளின் வியாபார தொழில் நுணுக்கங்கள், திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றைப் பட்டை தீட்டி ஆகச்சிறந்த வழிகாட்டல்களை வழங்குவதனை தலையாய நோக்கமாகக் கொண்டு 'தீவா கரத்திற்கு வலிமை' என்னும் தொழில் முயற்சிசார் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் அதனை ஒழுங்காக நடாத்திச் செல்வதற்கும் வியாபார உத்திகளை திறம்பட வகுப்பதற்கும் தேவையான நம்பிக்கை, அறிவு, திறன் என்பவற்றை வழங்கி பெண் தொழில் முனைவோருக்கு வலுவூட்டும் வகையில் இந்நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் சிறந்த பயண முகவர்களைக் கௌரவித்தது எமிரேட்ஸ் விமானம்

எமிரேட்ஸ் ஆனது 2023 ஆம் ஆண்டில் தனது விமான சேவைக்கு ஆதரவையும் அர்ப்பணிப்பையும் வழங்கிய இலங்கையில் உள்ள தனது முன்னணி பயண முகவர்களை விசேட நிகழ்வு ஒன்றில் பாராட்டியது.

கொழும்பில் உள்ள ஷங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்ற விருது விழாவில் எமிரேட்ஸின் சிறந்த 20 பயண முகவர் பங்குதாரர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன், இந்நிகழ்வில் கடந்த வருடத்திற்கான விமான நிறுவனத்தின் விற்பனை சாதனைகள் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக இலங்கைக்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தூதுவர் மேதகு கலீத் நாசர் அல் அமெரி மற்றும் மேற்கு ஆசியா மற்றும் இந்து சமுத்திர வர்த்தக நடவடிக்கைகளுக்கான எமிரேட்ஸின் சிரேஷ்ட துணைத் தலைவர் மேதகு அகமது கூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



விமான நிறுவனத்தின் விற்பனை மூலோபாயத்தில் பயண வர்த்தகபங்குதாரர்களின் முக்கியத்துவம் குறித்து பேசிய எமிரேட்ஸின் இலங்கை மற்றும் மாலைத்தீவிற்கான வதிவிட முகாமையாளர் ரஷித் அல் அர்தா தெரிவிக்கையில் 'எமது பயண வர்த்தக பங்காளிகள் இலங்கையில் விமான சேவையின் சாதனைகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்குகின்றனர்.அவர்களின் உள்நாட்டு நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதன் மூலம், எங்களின் வலையமைப்பை நாங்கள் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

'எமிரேட்ஸ் இலங்கைக்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வருவதுடன் மற்றும் அதன் பயணத் துறையின் எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் உள்ளது' என்று திரு. அல் அர்தா தொடர்ந்து கூறினார். 'இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடனான எமது ஆழமான மூலோபாய பங்குடமையின் ஊடாக 2024 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளையும் 2029 ஆம் ஆண்டளவில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்ப்பதற்கான அதன் மூலோபாயத்திற்கு எங்களின் தொடர்ச்சியான ஆதரவினை வழங்குவதன் மூலம் நாட்டின் சுற்றுலா மற்றும் வர்த்தகத் தொழிற்துறைகளை மேம்படுத்துவதிலும், பிரதான உலகச் சந்தைகளில் தேசத்தின் முக்கியத்துவத்தை விரிவுபடுத்துவதிலும் நாங்கள் செயலாற்றி வருகிறோம்.'

# சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை ஆதரிக்க IDB உடன் கூட்டிணைகிறது கொமர்ஷல் வங்கி





இலங்கையின் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு பொறுப்பேற்றுள்ள முதன்மையான அரச அமைப்பான கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் (IDB) கூட்டாண்மை மூலம் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) ஆதரவளிக்கும் புதிய முயற்சியை கொமர்ஷல் வங்கி ஆரம்பித்துள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) இணையதளத்தில் உள்ள 'BizConnect' தளத்தில் இருந்து, SMEகளை உலக சந்தையில் எல்லை தாண்டிய நிலைகளை அடைய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள வங்கியின் டிஜிட்டல் தளமான 'Commercial Bank LEAP GlobalLinker'ஐ IDBயின் பங்குதாரர்களுக்கு இந்த கூட்டாண்மை வழங்கும்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, IDB தலைவர் Dr. சாரங்க அலஹப்பெரும, IDB சபை உறுப்பினர் பி.எல்.யு. ரத்னமலல மற்றும் Digivation Pvt Limited இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சமீர் வக்கீல் ஆகியோரால் வர்த்தக வங்கிக்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு டிஜிட்டல் முறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. IDB இணையத்தளத்திற்கு வருகை தருபவர்களுக்கு Commercial Bank LEAP GlobalLinker தளத்திலிருந்து சேவைகளை வழங்குவதற்கும், IDB தனது பயனர்களுக்கு கூடுதல் அறிவை வழங்குவதற்காக மேடையில் கட்டுரைகள் மற்றும் தொழில் தொடர்பான ஆவணங்களும் வெளியிடப்படும்.

IDB இணையத்தளத்தில் உள்ள இந்த நேரடி இணைப்பானது, வங்கியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களை அடையாளம் கண்டு, அதற்கேற்ப சேவைகளை வழங்க, அவர்களின் அனுபவத்தை மேம்படுத்தி, வாடிக்கையாளர்களின் அணுகலையும், Commercial Bank LEAP GlobalLinker இன் பார்வையையும் அதிகரிக்கும்.

# ஆடம்பர சொகுசுடன் வடிவமைக்கப்பட்ட ஸ்டைலான Shirtworks சூட்கள் அறிமுகம்




இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான Emerald, அதன் SWX பம்பலப்பிட்டி காட்சியறையை மீண்டும் திறந்து வைத்துள்ளதோடு, அதன் புகழ்பெற்ற Shirtworks வர்த்தகநாமத்தில் Bespoke சூட் தெரிவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஒப்பிட முடியாத, ஸ்டைலான தெரிவுகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த அற்புதமான மேம்படுத்தலானது, உயர் தரம் மற்றும் தனித்துவமான நேர்த்தியைத் தேடுகின்ற விவேகமுள்ள ஆண்களுக்கு உயர் அனுபவத்தை உறுதியளிக்கிறது.

Emerald இன் விற்பனைப் பிரிவான Shirtworks (SWX) நீண்ட காலமாக நவீனத்துவ ஆடவர்களுக்கான புகலிடமாக இருந்து வருகிறது. Class One, ED Array, Leonardo போன்ற சர்வதேச வர்த்தகநாமங்களின் உயர்தர தெரிவுகளை அது வழங்குகிறது. அதன் பாராட்டைப் பெற்ற "Bespoke" பிரிவானது, மிகச் சிறந்த துணிகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த வடிவமைப்புகள் மூலம் இந்த அனுபவத்தை மேலும் உயர்த்துகின்றது.

அதன் மீள் திறப்பு மற்றும் புதிய வெளியீடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த Emerald International முகாமைத்துவ பணிப்பாளர் அஹமட் இக்ராம், "மீள் வடிவமைப்பு செய்யப்பட்ட SWX பம்பலப்பிட்டி காட்சியறையானது, ஆடவருக்கான ஆடம்பரமான ஆடைகளின் கொள்வனவை மீள்வரையறை செய்கிறது. சமகால சூழலுக்கு ஏற்ற, தனிப்பயனாக்கப்பட்ட சேவையுடன், தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட Bespoke சூட் தெரிவுகள் போன்ற சமீபத்திய வெளியீடுகளை கொள்வனவு செய்வதற்கான சிறந்த பின்னணியுடன் இக்காட்சியறை வடிவமைக்கப்பட்டுள்ளது." என்றார்.

# எஸ்.சி. முத்துகுமாரன எம்.பியாக பதவியேற்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய பாராளுமன்ற உறுப்பினராக எஸ்.சி.முத்துகுமாரன நேற்றுக் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பாராளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. இச்சந்தர்ப்பத்திலேயே புதிய பாராளுமன்ற உறுப்பினர் முதுகுமாரன சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இதையடுத்து அவர் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் கையொப்பமிட்டார். அனுராதபுரம் மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன அண்மையில்,பதவியை இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்டிருந்த வெற்றிடத்துக்கே எஸ்.சி. முதுகுமாரன புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். 1953ஆம் ஆண்டு பிறந்த எஸ்.சி.முதுகுமாரன அநுராதபுரம் மத்திய கல்லூரியில் கல்வி கற்றுள்ளார்.அவர் 1977ஆம் ஆண்டு தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்து 1991ஆம் ஆண்டு கலாவெவ பிரதேச சபைக்குத் தெரிவானார். 1993 மற்றும் 1999ஆம்ஆண்டுகளில் வடமத்திய மாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட இவர், சுதந்திரக் கட்சியின் கலாவெவ கிளையின் பிரதித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 2000ஆம் ஆண்டு வடமத்திய மாகாண சபையின் கமத்தொழில் அமைச்சர் பதவி வகித்த அவர் 2010ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எச்சரிக்குமளவுக்கு...

தொடர்பில் அவதானமாக இருக்குமாறு சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகரிக்கும் வெப்பநிலையால், ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்க போதியளவு நீரை பருகுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். வரட்சியான காலநிலையைக் கருத்தில் கொண்டு விவசாய நடவடிக்கைளுக்காக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்ப்பாசன, வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி விவசாயிகளை கோரியுள்ளார்.

## ஸ்ரீமத் பகவத் கீதையின் பிரதி...

சந்தோஷ் ஜா இதனை சபாநாயகரிடம் வழங்கினார். இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர் ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக, குருக்ஷேத்ர மேம்பாட்டு வாரியத்தின் அதிகாரிகளான கீதா மன்ஷி சுவாமி கியானந்த ஜி, சுவாமி குருஷரானந்த ஜி உள்ளிட்ட சுமார் நூறு பேர் கொண்ட தூதுக்குழுவினர் கலந்துகொண்டனர். பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோரும் இதில், கலந்துகொண்டனர்.

## பாடசாலைகளை அரசியலுக்கு...

அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். பாடசாலைகளுக்கு நன்கொடை மற்றும் உதவிகள் வழங்குகிறோம் என்ற போர்வையில் சிலர் அரசியல் கூட்டங்களை ஏற்பாடு செய்து வருவதாகவும், அதனை தடுக்குமாறு குழந்தைகள் மீது பற்றுக்கொண்ட சிலர் முன்வைத்த ஆலோசனைகளை கருத்திற்கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வரலாற்றில் பல்வேறு அரச தலைவர்களும், அரசியல்வாதிகளும் பாடசாலை மற்றும் பாடசாலை மைதானத்தை தமது அரசியலுக்காகவோ அல்லது பிறருடைய அரசியலுக்காகவோ எந்நேரத்திலும் பயன்படுத்தியதில்லையென அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர் மேலும் கூறுகையில்,

பாடசாலைகள் மற்றும் பாடசாலை வளாகங்களை அரசியல் மேடைகளாக பயன்படுத்துவதை இடைநிறுத்தவும், தடை செய்யவும் மற்றும் நிறுத்தவும் ஆளுநர்களுக்கு உத்தரவிடும் தீர்மானத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் முன்வைத்தார். நமது நாட்டின் வரலாற்றில் பல்வேறு அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் பாடசாலையையும், பாடசாலை மைதானத்தையும் தங்கள் அரசியலுக்காகவோ, மற்றவர்களின் அரசியலுக்காகவோ ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. பல்வேறு பரோபகாரிகள் மற்றும் தனிநபர்கள் இலங்கையின் பாடசாலை கட்டமைப்புக்கு பாரிய நன்கொடைகளை வழங்கியுள்ளனர். நன்கொடைகளை, உதவிகளை பாடசாலைகளுக்கு வழங்குவதை தடுக்கவில்லை. ஆனால், மாணவர்களுக்கு நன்கொடைகள், உதவிகள் வழங்கும் போர்வையில், அரசியலின் பக்கம் அந்த மாணவர்களை இழுத்துச் செல்லும் நடவடிக்கையை தடுக்க வேண்டுமென குழந்தைகளை நேசிக்கும் மக்கள் ஆலோசனை முன்வைத்துள்ளனர். அதேவேளை இவற்றைத் தடுக்க மாகாண ஆளுநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை...

உறுப்பினர்கள் உள்ளிட்ட 44 பேரின் கையொப்பங்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரான ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர், பாராளுமன்ற பதில் செயலாளரான பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவிடம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேற்று பிற்பகல் கையளித்தனர்.

இதில், ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளருடன் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சுயாதீன எதிரணி உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், சந்திம வீரக்கொடி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

## பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைக்கு...

இழைக்கப்படுகின்றன என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது தமக்கு நம்பிக்கையுள்ளதாகவும் மலையக மக்கள் தொடர்பில் நன்கு அறிந்த அவர் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கை உண்டு என்றும் குறிப்பிட்டார்.

## சாந்தனின் உடல் எள்ளங்குளம்...

சிறையிலிருந்த சாந்தன், விடுவிக்கப்பட்ட போதும் தொடர்ந்து சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டார்.இந்நிலையில்,தாயகம் திரும்ப இருந்த அவர் திடீரென நோய்வாய்பட்டு உயிரிழந்தார்.

சாந்தன் உயிரோடு இலங்கைக்கு வருவாரென எதிர்பார்த்திருந்த நிலையில்,அவரது பிரேதம் ஊர்வலமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

பல்வேறு இடங்களிலும் திரண்டிருந்த மக்கள் சாந்தனுக்கு கண்ணீர் அஞ்ஞலி செலுத்தினர்.

துயிலுமில்லத்திற்கு எடுத்துவரப்பட்ட சாந்தனின் சடலம், இறுதியாக எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பாடசாலை மாணவர்களுக்கான...

நாட்டில் நூறு கல்வி வலயங்களைச் சேர்ந்த 7,902 பாடசாலைகளில் 'பாடசாலை உணவுத் திட்டம்' அமுல்படுத்தப்படுவதாக அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 85 ரூபா உணவுக்காக செலவிடப்படுகிறது.

ஆனால், இது குறித்து ஆய்வு செய்த அதிகாரிகள் குழு விலை ஏற்ற இறக்கத்தின் விளைவாக ஒரு உணவுக்கு ரூ. 110/ குறைந்தபட்சம் செலவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.







## வடக்கு சுகாதார பிரச்சினைகளுக்கு...

சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவுக்கு வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் எடுத்துரைத்தார். இதன்போதே அமைச்சர் இந்த உறுதியை வழங்கியுள்ளார். சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவை, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், கொழும்பு சுவசெரிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் நேற்று (05) சந்தித்து கலந்துரையாடினார்.

வடமாகாணத்தில் சுகாதார துறைக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் சுகாதாரத் துறையினர் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் ஆளுநரால், எடுத்துக் கூறப்பட்டது.

## ஆரம்ப பிரிவு மாணவர்களின்...

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக 2024ஆம் ஆண்டு 170 நாட்களுக்கு "பாடசாலை உணவுத் திட்டத்தை" அமுல்படுத்துவதற்கும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் முன்மொழிவு அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 தொடக்கம் 05 ஆம் ஆண்டு வரையான மாணவர்களுக்கான பாடசாலை உணவு திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நாட்டின் 100 கல்வி வலயங்களைச் சேர்ந்த 7,902 பாடசாலைகளில் மொத்தம் (1.08 மில்லியன்) 10 இலட்சத்து 80,000 பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய "பாடசாலை உணவுத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், மாணவன் ஒருவருக்கு தினமொன்றுக்கு 85 ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை ஏற்ற இறக்கத்துக்கு ஏற்ப ஒரு வேளை உணவுக்கு குறைந்தபட்சம் 110 ரூபாய் செலவாகுமென இது குறித்து ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு தெரிவித்துள்ளது. Save the Children அமைப்பு 2024 ஆம் ஆண்டுக்காக தெரிவி செய்யப்பட்ட 917 பாடசாலையகளில் 2,00,000 மாணவர்களுக்கு 03 வகையான உணவுகளை "பாடசாலை உணவு திட்டம்" சார்பாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளது.

## தேர்தல்கள் சவால்களாகவே இருக்கும்...

நடந்தாலும் அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு தயாராக உள்ளேன். தேவையான இடங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவேன்.

மக்கள் சொல்வதைச் செய்கிறோம். சில இடங்களில் தவறு செய்கிறோம். நாங்கள் சொல்வதை மக்கள் ஏற்க மாட்டார்கள்.

சில சமயங்களில் மக்கள் சொல்வதை நாங்கள் ஏற்கவில்லை. இவற்றை திருத்திக் கொண்டு பயணிக்க உள்ளோம்.

## திறந்த விசாவில் வெளிநாட்டு...

வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மியன்மார் சைபர் கிரைம் பகுதியில் இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள்,பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தை சேர்ந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் 56 இலங்கையர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இணையத்தள முறைமை ஊடாக நிதி மோசடியில் ஈடுபடுவதற்கு அவர்கள் பலவந்தமான வகையில் நிர்பந்திக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உளவியல் ரீதியான தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

சட்டவிரோதமான வகையில் வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு தரப்பினர் அங்கு நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில் மற்றும் ஒரு தரப்பினர் தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்வதை குறிப்பிட வேண்டும்.

அண்மையில் மூன்று இலங்கையர்கள் துபாய் சென்று அங்கிருந்து பாங்கொக் சென்று தரை மார்க்கமாக தாய்லாந்து செல்ல முயற்சித்துள்ளனர்.

இத்தகைய பின்னணியில் திறந்த விசா மூலம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக செல்வதை நாட்டு மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தீர்ப்பு மேலும் தாமதமானால்...

கோனஹங்ஆர கனிஷ்ட வித்தியாலயத்திலும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் எவரும் இல்லை. அண்மையில் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்குச் சென்றபோதே இந்நிலையை காண முடிந்தது.

நாட்டில் 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. அதனை நிவர்த்தி செய்வதற்கு 22 ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் துறையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்கு தொடர்ந்தும் பதிலளித்த அமைச்சர்,

2019 இல்,பட்டதாரிகள் அபிவிருத்தி அதிகாரிகளாக இணைக்கப்பட்டனர். பின்னர் 22,000 பேர் அவர்களின் பட்டத்துக்கு அமைய பாடங்களுக்கு நியமிக்கப்படாமல் பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆரம்ப பிரிவுகளிலே இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நான் இந்த அமைச்சை பொறுப்பேற்கும்போது இந்த 22ஆயிரம் பேருக்கும் பயிற்சியளித்து நியமனம் வழங்கி 3 வருடங்களுக்குப் பின்னர் பரீட்சை நடத்தி நிரந்தர நியமனம் வழங்க தீர்மானித்திருந்தேன்.

இந்த நடவடிக்கை ஆசிரியர் சேவை யாப்புக்கமைய ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் முறைமைக்கு மாற்றமானதாகும். அதனால் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, அந்த 22,000 பேருடன் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், புதிதாக ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டது.

அதற்கிணங்க 52ஆயிரம் விண்ணப்பங்கள் எமக்கு கிடைத்தன. அவர்களை ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்ய போட்டிப்பரீட்சை நடத்த நடவடிக்கை எடுத்தபோது, அதற்கெதிராக சிலர் நீதிமன்றம் சென்றனர்.

இந்த பரீட்சையை நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிலையில் கடந்த வருடம் மார்ச் 25 இல்,பரீட்சையை நடத்த இரண்டு தினங்களே இருந்தன.இதன்போதே உயர் நீதிமன்றம் இடைக்கால தடையு த்தரவை பிறப்பித்தது.

இந்தத் தடையுத்தரவு வழங்கப்பட்டு சுமார் ஒரு வருடம் கடந்தும், இதற்கான தீர்ப்பு இதுவரை வழங்கப்படாமல் உள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதிகளில் ஒருவர் ஓய்வு பெற்றுச்செல்ல சில தினங்களே உள்ள நிலையில், அவ்வழக்கு தொடர்பான தீர்ப்பை வழங்குமாறு நான், எனது சட்டத்தரணிகள் ஊடாக கோரியிருந்தேன். ஆனால் அந்த நீதிபதி ஓய்வு பெற்றுச் சென்றும் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. நீதிமன்றம் மாணவர்களின் கல்வியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது.இந்த அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்படுகிறது.

## இலங்கை கடற் பரப்புக்குள் எல்லை...

போராட்டம் வலுவடைந்துள்ளதை கருத்திற்கொண்டே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இராமேசுவரம் மற்றும் மண்டபம் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கும் போது தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் இந்த எச்சரிக்கை அமைந்துள்ளது.

## இன்றைய பலன்கள்

**(06.03.2024)**



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா**
**(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**

**மேஷம் :** அலுவலக பணிகளில் கவனம் இல்லாமல் விட்டால் மீண்டும் அதே பணியை செய்ய நேரிடலாம். கூட்டத் தொழில் வியாபாரம் நன்றாக நடைபெறும்.

**ரிஷபம் :** கூடுதல் வருமானம் பெற நண்பர்களுடன் திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றம் பெறக்கூடும்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக பணியாளர்களின் வேலைகளையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்படலாம். சொந்த தொழில் செய்பவர்கள் புதிய நபர்கள் மூலம் அதிக வேலைகளை பெறுவீர்கள்.

**கடகம்:** சொந்த தொழில் செய்பவர்கள் நவீன கருவிகளை பணிகளை விரைந்து முடித்து வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவீர்கள் கூட்டுத்தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு விளக்கமான லாபம் குறையாது.

**சிம்மம் :** சிலருக்கு வெளியிடங்களுக்கு மாறுதல் இருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நபரின் வேலையில் அதிக ஈடுபாட்டுடன் பணியாற்றுவர்.

**கன்னி :** சிலருக்கு அலுவலகத்திலேயே செல்வாக்குள்ள பொறுப்புகள் வந்து சேரும். சொந்த தொழில் செய்பவர்கள் புதிய நபரின் வருகையால் அதிக வேலையும் வருமானமும் பெறக்கூடும்.

**துலாம் :** சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய நபர்களின் பணிகளை உற்சாகமாக செய்து சரியான காலத்தில் கொடுத்து மகிழ்வீர்கள். பணவரவு கிடைத்து குடும்ப செலவுகளை சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம் :** சொந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள் குறித்த காலத்தில் நிறைவடைந்த பணிகளை கொடுத்து பாராட்டு பெறுவீர்கள். கூட்டுத்தொழிலில் வழக்கமான லாபம் வந்து சேரும்.

**தனுசு :** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபர்களின் அறிமுகமும் அவரால் தொழில் ரீதியான முன்னேற்றமும் ஏற்படும்.

**மகரம் :** சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய பணிகளில் அதிக ஆர்வத்தோடு செயல்படுவர். வேலைகளுக்கு தக்க ஆதாயம் கிடைத்து முக்கிய செலவுகளுக்கு பயன்படுத்துவர்.

**கும்பம் :** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அவசர வேலைகள் வந்து சேரலாம்.! உயர் அதிகாரிகளின் விருப்பப்படி முக்கிய பணி ஒன்றை செய்து கொடுத்து பாராட்டு பெறுவீர்கள்.

**மீனம் :** கூட்டு வியாபாரம் எதிர்பார்க்கும் லாபம் தருவதாக இருக்கும். விலைவாசி ஏற்றத்தாழ்வால் வியாபாரத்தில் சிறிது சரிவு ஏற்படக்கூடும்.

## நாட்டின் பொருளாதார... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

தன்னை நம்பியவர்களை தாம், என்றும் கைவிட்டதில்லை. திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் கடற்றொழிலாளர் சார் தேவைப்பாடுகள் மற்றும் மக்கள்சார் தேவைப்பாடுகள் போன்றவற்றை நேரடியாக அறிந்து கொள்வதுடன்,= கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்துவதற்காகவே திருகோணமலைக்கு விஜயம் செய்தேன்.

கட்சி உறுப்பினர்களின் செயற்பாடுகள் பரந்துபட்டளவில் இருக்க வேண்டும். தற்போது நடைமுறைசாத்தியமான வழிமுறையை பின்பற்றும் எமது கட்சி, அரசியல் இலக்குகளை அடைவதற்கு சாத்தியமான சூழல் ஏற்பட்டுள்ளது. நம்பிக்கையுடன் உழைத்தால் அனைத்து பிரச்சினைகளுக்கும் சாதகமான தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ரயில்வே இல்லத்தில்...

இருந்துள்ளது. இப்பகுதிகளில் இது தொடர்பான பல புராதன பொருட்கள் உள்ளன.

இவற்றை ஒன்று சேர்த்து அருங்காட்சியமாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீதாவக்க இராச்சியத்திற்குச் சொந்தமான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் அடையாளம் காணப்பட்ட வரலாற்றுக்கு முந்திய காலத்து கற்கருவிகள் மற்றும் ஆதி மனிதர்கள் பயன்படுத்திய கற்களாலான உபகரணங்கள்,விலங்குகள் இன்னும் தாவரங்களின் படிமங்களை சரியான முறையில் காட்சிப்படுத்த இந்த அருங்காட்சியகம் பயன்படும்.சீதாவக்க இராச்சிய காலத்தில் சிங்கள மன்னர்கள் பன்படுத்திய துப்பாக்கிகள், சிங்கள வாள்கள் மற்றும் ஏனைய இராணுவ உபகரணங்கள், நிறுவை அளவை மற்றும் அகழ்வு உபகரணங்களும் இங்கு காட்சிப்படுத்தப்படும். சீதாவக்க தலைமை தபால் காரியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள, இலங்கை ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மேற்படி அருங்காட்சியகத்தை நிறுவுவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## இரண்டு ஆண்டு கால...

அரங்கில் நடைபெறும். ஐக்கிய தேசியக் கட்சி தவிசாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவினால் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. 2021 ஜூன் (23) ரணில் விக்கிரமசிங்க 09ஆவது பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட தினம் முதல் தேசிய தலைமைத்துவ பயணம் வரை பத்திரிகைகளில் வெளியான சுமார் 600 கார்டூன்களைத் திரட்டி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. 40 கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் சுமார் 20 பத்திரிகையாளர்கள் இந்நூலுக்கு பங்களித்துள்ளனர், கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர்களும் இவ்விழாவின் போது கௌரவிக்கப்பட உள்ளனர். இந்நூல் வெளியீட்டு விழாவில் இந்திய கேலிச்சித்திரக் கலைஞர் நாலா பொன்னப்பா விசேட விருந்தினராக பங்கேற்கவிருப்பதுடன், சிறப்புரையும் ஆற்றவுள்ளார். பேராசிரியர் ரொஹான் நெத்தசிங்க நூலாய்வு நிகழ்த்து உள்ள அதே வேளை,இந்நிகழ்விற்கு முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள்,பாராளுமன்ற அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## சரசவிய விருது விழா 2024:...

மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இங்கு கருத்து தெரிவித்த லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், சரசவிய பத்திரிகை 1963 இல், தொடங்கப்பட்டது. இதன் விருது வழங்கும் விழா இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களின் பின்னர்

1964 ஆரம்பமனாது. 2018 ஆம் ஆண்டிலேயே லேக் ஹவுஸ் நிறுவனம் கடைசியாக சரசவிய விருது விழாவை நடத்தியது. 2018 க்குப் பிறகு கொவிட்19 தொற்றுச் சூழலால் இவ்விழாவை நடத்த முடியவில்லை. அதன்படி, 2024ஆம் ஆண்டு இலங்கைத் திரையுலகின் மாபெரும் விழாவாகக் கருதப்படும் சரசவிய விருது வழங்கும் விழா லக்ஸ் சரசவிய விருது வழங்கும் விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 30 வருடங்களின் பின்னர் இலங்கை யுனிலீவர் நிறுவனம் சரசவிய விருதுகளின் பிரதான அனுசரணையாளராக இணைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

இலங்கையில் 114 வருடங்களாக தொடர்ச்சியாக வெளியாகும் ஒரேயொரு பத்திரிகை தினமின பத்திரிகையாகும். அச்சு ஊடகம் மிகவும் சீரழிந்து கடுமையான சவால்களை எதிர்நோக்கி வரும் வேளையில் லேக் ஹவுஸின் பணிப்பாளர் சபை இந்த சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளது. நாங்கள் அச்சு ஊடகம் போன்று பிற டிஜிட்டல் ஊடகங்களிலும் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதில் உரையாற்றிய

யுனிலீவர் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் திருமதி ஷமாரா சில்வா தெரிவித்ததாவது;

சரசவிய விருதுகள் நாட்டின் திரையுலகின் மிகப் பிரமாண்டமான திரைப்பட விழா எனக் கூறலாம். 2024 ஆம் ஆண்டில், லக்ஸ்( LUX) அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இச்சந்தர்ப்பத்தில் சினிமாவோடு இணைந்திருக்க வேண்டும் என்று நினைத்தோம். சினிமா என்பது மக்களுடன் இணைந்த ஒன்று. சினிமா துறையை மீட்டெடுக்கும் நிறுவனமாக நாமும் இணைய வேண்டும். கடந்த ஆண்டு முதல் நாங்கள் பல்வேறு திரைப்பட விருது விழாக்களுடன் இணைந்துள்ளோம். சரசவிய விருது வழங்கும் விழா பிரமாண்டமான விருது வழங்கும் விழாவாகும்.

இதனாலேயே நாங்கள் இணைந்து கொண்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.ஈடுபட்டோம்.

# மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு கட்சித் தலைவர்கள் கடும் அதிருப்தி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுயமான தீர்மானத்துக்கு அமைய மத்திய வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தமை தொடர்பில், மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளிடம் கட்சித் தலைவர்கள் நேற்று கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளனர்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், மத்திய வங்கி தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட நிலையிலேயே கட்சித் தலைவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

இதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான கூட்டத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க நேற்றைய தினம் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது..

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய மத்திய வங்கி சட்டமூலத்தில் சுயாதீன தீர்மானமாக சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் இருந்த போதிலும், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய குறித்த விடயத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற காரணத்தினால் இவ்விடயம் சட்டமூலத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் இதன் போது கட்சித்தலைவர்கள்சுட்டிக்காட்டினர்.

அதன்படி, புதிய சட்டத்தில் மத்திய வங்கியின் பணிகளை சுயாதீனமாக மேற்கொள்ள ஏற்பாடுகள் உள்ள போதிலும், சுயாதீன தீர்மானத்தின் அடிப்படையில் சம்பளத்தை அதிகரிக்க எந்தவொரு இடத்திலும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள்; சட்டத்தின் 5,8 மற்றும் 23வது பிரிவுகளில் அதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகவும், நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பில் சகல செலவினங்களையும் ஈடு செய்வதற்கு மத்திய வங்கியின் நிதியத்தைப் பயன்படுத்த சட்டத்தில் இடமிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனினும், செலவினங்கள் தொடர்பில் சட்டத்தில் ஏற்பாடுகள் இருந்தபோதிலும், சம்பளம் தொடர்பில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் இல்லையென கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். சட்டத்தின் 23வது பிரிவுக்கு அமைய சம்பள அதிகரிப்பை தீர்மானிக்கும் உரிமை அவர்களுக்கு இருந்தாலும் அதற்கான இறுதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளதாக கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த செலவுகள் மத்திய வங்கி நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் என்றும், ஒருங்கிணைந்த நிதியில் இருந்து



அல்ல என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். மத்திய வங்கியின் நிதியைப் பயன்படுத்துவதற்கு இந்தச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் நீண்ட நேரம் விடயங்களை தெளிவு படுத்தினர்.

மத்திய வங்கியின் நிதியம் மக்களின் நிதியாக இருப்பதால் அது தொடர்பில் மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும், அதற்கமைவாகப் பொது நிதிக்கு பொறுப்பான பாராளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை எனவும் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகத்திற்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்துக்கு (Collective Agreement) அமைய ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையும் இவ்வாறு சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதாகவும், முன்னைய வருடங்களிலும் இது சம்பிரதாயமாக மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். எதுவாக இருந்தாலும், இவ்வாறான ஒப்பந்தத்தை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு தொழில் அமைச்சில் பதிவுசெய்ய வேண்டும் என்றும், அவ்வாறான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றும் கேள்வியெழுப்பப்பட்டது. எனினும், அவ்வாறான அனுமதி எதுவும் பெறப்படவில்லையென அதிகாரிகள் குறிப்பிட்டனர். தொழில் அமைச்சில் பதிவு செய்வதன் மூலம் மாத்திரமே இவ்வாறான கூட்டு ஒப்பந்தமொன்றை செயற்படுத்த முடியும் எனவும் கட்சித் தலைவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இருந்தபோதும், புதிய சட்டத்தின் ஊடாக மத்திய வங்கியை சுயாதீனப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது சுயாதீனமான முடிவுகள் எடுத்து சம்பளத்தை அதிகரித்துக்கொள்வது அல்ல என்றும், அரசியல் தலையீடுகள் இன்றி நாட்டின் பொருளாதாரம் தொடர்பான சரியான கொள்கைகளை வகுக்கப்படும் என்பதேயாகும் எனக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஏதாவது ஒரு விதத்தில் சட்டத்தின் ஊடாக அனுமதி இருந்தாலும், நாடும் நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உணர்வற்ற வகையில் இவ்வாறு சம்பள அதிகரிப்பை மேற்கொள்வது தார்மீகப் பொறுப்பற்றது என்றும், இதனை அனுமதிக்க முடியாது என்றும் கட்சித் தலைவர்கள், மத்திய வங்கியின் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். ஒரு பிரிவினருக்கு மாத்திரம் இந்தளவு வரப்பிரசாதங்களை வழங்குவது ஒருபோதும் அனுமதிக்க முடியாதது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



## உண்மை, ஒற்றுமை, நல்லிணக்க ஆணைக்குழு சட்டம் ஆராய்வு

### கொழும்பில் விசேட கலந்துரையாடல்கள்

நாட்டில் தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் உத்தேச "உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டத்தின்" வரைவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இரண்டு விசேட கலந்துரையாடல்கள் அண்மையில் கொழும்பில் நடைபெற்றன.

இவற்றில் ஒரு கலந்துரையாடல் ஹிமாலயன் குழுவின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல நிபுணத்துவ அறிவுள்ள பல தரப்பினரின் பங்கேற்புடன் நடைபெற்றது. அடுத்த கலந்துரையாடல் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிற சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இங்கு, நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் (ISTRM) தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் இந்த சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான உத்தேச சட்டமூலம் குறித்தும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இணைந்திருந்த நபர்கள் அதற்கு முழுமையாக பங்களிப்பதோடு ஆலோசனைகள், யோசனைகளை முன்வைத்தனர்.

1983 2009 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களில், இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிய பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேச ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் முறையாக தகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க பரிந்துரை வழங்குதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாகப் பயன்படுத்துவது இதன் நோக்கமாகும்.

1983 2009 ஆண்டுக்கு இடையிலும் அதற்குப் பின்னரும் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய இந்த ஆணைக்குழு சட்டமூலமொன்றைத் தயாரிக்கவுள்ளது.

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகளின்றி விவாதம் நடத்தக்கூடாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் இன்றி சமூக பாதுகாப்பு உதவுத் தொகை வரி திருத்த சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாதென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்தே அவர் இதனை வலியுறுத்தினார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ள போதிலும், சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து இ)து தொடர்பான பரிந்துரை எதுவும் முன்வைக்கப்படவில்லை என அறியமுடிகிறது.



சமூக பாதுகாப்பு உதவுத் தொகை புரள்வை வைத்தே அறவீடு செய்யப்படுகிறது. இதற்குத் தேவையான சட்ட வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லாததால், நுகர்வோர் மீது திணிக்கும் சூழ்நிலை நிலவுவதாலும்,வற் வரி அதிகரிப்பு மற்றும் சமூக பாதுகாப்பு உதவுத் தொகை திருத்தச் சட்டமூலங்கள் இரண்டையும் எதிர்க்கட்சி எதிர்க்கிறது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகள் இன்றி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**விநியோகஸ்தர் வசமுள்ள தொகுதியில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிர்மாணித்தல் நடாத்திக்கொண்டு செல்வதற்காக அனுமதியை வழங்க கவனத்திற் கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்கள் கோருதல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிலைய வலையமைப்பை விஸ்தரித்து மேலாக வினைத்திறனுடனான பாவனையாளர் சேவையை இந்நாட்டு மக்களுக்கு வழங்கும் பொருட்டு வியாபாரியொருவராக முக்கியமான உத்தியாக இடத்தை மையப்படுத்தி விநியோகஸ்தர்கள் வசமுள்ள தொகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணித்து நடாத்திக்கொண்டு செல்லும் பொருட்டு தகைமை வாய்ந்த நபர்கள் / நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து (www.ceypetco.gov.lk) பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு இயைபான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-03-26ஆம் திகதியாகும் என்பதுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அடிப்படை ஆவணங்கள் சகிதம் உத்தேச இடப்பரப்பில் அமைந்துள்ள மாகாணத்திற்குரித்தான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் / தலைமை அலுவலகத்தின் சந்தைப்படுத்தல் பணியகத்திற்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

புதிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிர்மாணித்து நடாத்திக்கொண்டு செல்லும்பொருட்டு ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர்கள் மேலும் இது தொடர்பில் ஆர்வம் கொள்வார்களானால் இந்த விளம்பரத்தின் பிரகாரம் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

புதிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிறுவுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள மூலப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு இயைபுடைய மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் அதன் விபரங்களை www.energymin.gov.lk எனும் இணையதளத்தில் பரீட்சித்துப் பார்க்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. வியாபாரியொருவராக முக்கியமான உத்தியாக இடத்திற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் மட்டும் மதிப்பீடு செய்யப்படவுள்ளதால் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது இதற்கு இயைபான அறிவுரை படிவத்திற்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதில் ஆர்வம் காட்டும் தரப்பினரிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

2024-03-06

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.
www.ceypetco.gov.lk

## பொதுப் போக்குவரத்து துறையில் மின்சார பஸ்வண்டிகள் ஈடுபடுத்தப்படும்

### அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பொது போக்குவரத்துத் துறையில் நவீன வசதிகளுடனான 200 மின்சார பஸ் வண்டிகளை முதற்கட்டமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக, போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முதற்கட்டமாக மேல் மாகாணத்தில் இந்த பஸ் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், எதிர்வரும் தமிழ், சிங்கள புது வருடத்திற்கு முன்பதாக 50 பஸ்களை மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் நிரோஷன் பெரேரா எம்பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதே வேளை, தனியார் மற்றும் அரச துறை மூலம் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பஸ் வண்டிகளுக்கும் சிசிடிவி கெமராவுடன் கூடிய நவீன தொழில்நுட்பத் தொகுதி பொருத்தப்படுகிறது. இது தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை நவீன தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்துவது கடினமான விடயம் என்றும் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பொது போக்குவரத்துக்காக கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் ஈ டிக்கட்டிங் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதும் அதனை இன்று வரை நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஈ டிக்கட்டிங் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி செய்வதாகவும் ஈ மோட்டரிங் முறைமையை 2014ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதும் அதற்கான வாய்ப்பு நேற்று முன்தினம் ஐந்தாம் திகதியே கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.அந்த வகையில் ஆறு மாதங்களுக்குள் ஈ டிக்கட்டிங் முறைமையை நடைமுறைப்படுத்தவும் ரயில் விபத்துக்களை தடுப்பதற்காக நவீன ரயில் பாதுகாப்புக்கடவை முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.03.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5409 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,418,392.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 1 4 1 9 7 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3651 — சீட்டிழுப்பு திகதி 2024.03.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,796,687.36
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 08 41 64 79 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 16917

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1757 — 2024.03.04 — 63769 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 426,233,766.00
ஆங்கில எழுத்து X — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 46 63 65 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.03.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0235
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 0 7 4 6 9 0
L7 எழுத்து W
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.26,228,075.20

ராசி சுப பலன் — திகதி 2024.03.04 — சீட்டிழுப்பு இலக்கம் 718 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,113,867.20
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 13 17 41 49 — தனயோக இலக்கம் 57271 — நாளுக்கான விதி எண் 24

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1439 — 2024.03.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,430,564.64
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 19 33 66 69 — விசேட எழுத்து F — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 03537

# கிழக்கின் குரல்



## நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயத்தை முன்னெடுக்க எதிர்பார்ப்பு

### மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

**கல்லடி குறூப் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயச் செய்கையை எதிர்காலத்தில் முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (05) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனுக்கும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளன பிரதிநிதிகளுக்கும் இடையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

எதிர்காலத்தில் புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய இலத்திரனியல் பாவனையை அறிமுகப்படுத்தி சிறந்த விளைச்சலை பெற்றுக்கொள்வதற்கு தேவையான முன்மொழிவுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நெல் உலர்த்தும் இயந்திரம், மண்தரப் பரிசோதனை ஆய்வுகூடம், நெற்களஞ்சியசாலை ஆகியவை தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அவர்களின் பிரச்சினைகளுக்கு துறைசார் நிபுணர்களால் தீர்வு வழங்குவதற்கான கலந்துரையாடலை ஒழுங்கு செய்வது தொடர்பாகவும் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் பல்கலைக்கழகம், துறைசார் நிபுணர்கள், விவசாயிகளை ஒன்றிணைத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பது தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

## கண்ணகிபுரம் லயன்ஸ் கழக வீதி செப்பனிடல்



கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 16.7 மில்லியன் செலவில் 870 மீற்றர் நீளமான கண்ணகிபுரம் லயன்ஸ் கழக வீதியை கார்ப்பட் வீதியாக செப்பனிடும் பணியை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆரம்பித்து வைத்துள்ளார்.


மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி மற்றும் அதனுடன் இணைந்த சுயதொழில் விருத்தியை யிட்டு அங்குள்ள வீதிகளை செப்பனிடும் பணி, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆறுமுகம் தேவராஜ், கோறளைப்பற்று முன்னாள் தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், கட்சியின் கண்ணகிபுரம் கிராமிய குழுத் தலைவர் மோகன்ராஜ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

### திருக்கோணேஸ்வர கோயிலில்

## சிவஞான பாலய சுவாமியின் சிறப்பு சொற்பொழிவு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருக்கோணேஸ்வரம் கோயிலில் மகா சிவராத்திரி விரதத்தையிட்டு நடத்தப்பட்டுவரும் நிகழ்வில் தமிழ்நாட்டு மைலம் பொம்புரம் ஆதீனத்தின் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமியின் ஆன்மிக சொற்பொழிவு நடைபெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை (04) நடைபெற்ற 3ஆம் நாள் நிகழ்விலேயே ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமி சொற்பொழிவாற்றினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி முதல் மகா சிவராத்திரி நிகழ்வுகள், திருக்கோணேஸ்வரம் கோயிலில் தொடர்ச்சியாக தினமும் மாலை வேளையில் நடைபெற்று வருகின்றன. இதில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வருகின்றனர். இந்நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (08) வரை தொடர்ந்து நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தம்பலகாமத்தில்

## தென்னைகளில் ஒருவித நோய்த் தாக்கம் பரவல்

**கிண்ணியா மத்திய நிருபர்**



திருகோணமலையின் தம்பலகாமம் பிரதேசத்தில் ஏக்கர் கணக்கான காணிகளிலுள்ள தென்னை மரங்களுக்கு ஒருவித நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தேங்காய் உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பெய்த அதிகளவான மழையின் பின்னர் தென்னை மரங்களில் வெண்ணிறப் பூச்சியின் நோய்த் தாக்கம் பரவ ஆரம்பித்துள்ளதாகவும் இதனால் எதிர்காலத்தில் தென்னை மரங்கள் அழிவடையும் அபாயம் உள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

தென்னை மரங்களிலுள்ள இந்த நோய்த் தாக்கம் தற்போது கொய்யா, மா, வாழை போன்றவற்றுக்கும் பரவுவதாகவும், விவசாயிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த கமநல சேவைகள் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.

### தேசிய ரீதியில் சாதனை படைத்த

## அல்–அமீன் பாடசாலை மாணவருக்கு தௌபீக் எம்.பி. வாழ்த்து



திருகோணமலை மாவட்ட பாடசாலைகள் தேசிய ரீதியில் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டுமெனவும், அதற்கு தன்னால் முடிந்த அனைத்து பக்களிப்புகளையும் வழங்க தயாராகவுள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் இடம்பெற்ற பாசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தௌபீக் எம்.பி. வாழ்த்துத் தெரிவித்த போதே, இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"நேற்று முன்தினம் திங்கட்கிழமை (04) கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற அகில இலங்கை ரீதியான கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு எமது மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த தி/கிண்/ அல் அமீன் வித்தியாலாய மாணவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கின்றேன். இம்மாணவர்களை வழிநடத்திய பாடசாலை சமூகத்தினர் அனைவருக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

## சம்மாந்துறை வைத்தியசாலையின் கண் சிகிச்சை பிரிவு வைத்தியர் காலமானார்

**கல்முனை விசேட, சாய்ந்த மருது விசேட நிருபர்கள்**



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி, வைத்தியர் எம். எம்.அல்அமீன் றிஷாத் தனது 53ஆவது வயதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (04) இரவு காலமானார்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த இவர், கொழும்பு பொது வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் நீண்டகாலம் பணியாற்றியதுடன், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையிலும் இவர் கடமையாற்றியிருந்தார்.

கொரோனா தொற்றுக் காலத்தில் சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்ற இவர், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருந்தார்.

சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினராகவும் இவர் இருந்ததுடன், சில பொது அமைப்புகளின் மூலமாக சமூக நலன் சார்ந்த விடயங்களிலும் இவர் முன்னின்று சேவையாற்றிருந்தார்.

இவரது ஜனாஸா நேற்று முன்தினம் நள்ளிரவு சாய்ந்தமருது அக்பர் பள்ளி மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது.

### காத்தான்குடி

## அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு தமிழ்நாட்டு ரஹ்மத் பதிப்பக குழுவினர் விஜயம்





**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**

காத்தான்குடி பூர்வீக நூதனசாலை மற்றும் புதிய காத்தான்குடி அல் அக்ஸா பெரிய பள்ளிவாசலுக்கு தமிழ்நாட்டின் ரஹ்மத் பதிப்பக உயர்மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (04) விஜயம் செய்துள்ளனர். கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் அழைப்பின் பேரிலேயே அவர்கள் காத்தான்குடிக்கு விஜயம் செய்துள்ளனர்.

அவர்களுடன் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், உலகப் புகழ் தமிழ்மொழி அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்றுள்ளனர்.

### கவிக்கோ, சிவத்தம்பி பெயர்களில்

## தென்கிழக்கு பல்கலையில் இரு ஆய்வு இருக்கைகள்

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இரு ஆய்வு இருக்கைகள் நிறுவப்பட்டுள்ளதாக, அப்பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தெரிவித்தார்.

தமிழ்நாட்டு றஹ்மத் அறக்கட்டளையினருக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினருக்கும் இடையில் அண்மையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்தே இந்த ஆய்வு இருக்கைகள் நிறுவப்பட்டுள்ளன.

கவிக்கோ அப்துல் றஹ்மான், பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரின் பெயர்களிலேயே இந்த ஆய்வு இருக்கைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆய்வுகளுக்கான தேர்வு பொதுமைப்பாடு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு விருதுகள் இருக்கையாளர்களின் பெயர்களில் வழங்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக் கழக மும்மொழிக்கற்கை மாணவர்களுக்கு பீ.எச்.அப்துல் ஹமீட் விருதும் சமூகவியல் மாணவர்களுக்கு அறக்கட்டளை நிறுவுனர் முஸ்தபா விருதும் வழங்கப்படவுள்ளன.

வசதி குறைந்த மாணவர்களுக்கு பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கான புலமைப்பரிசில் திட்டத்தை முன்னெடுக்க ஆலோசித்துள்ளதுடன், இதற்கான நிதியாண்மையை றஹ்மத் அறக்கட்டளையினர் முன்னெடுக்கவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### காத்தான்குடியில்

## போதைப் பாவனையுடன் தொடர்புடைய 31 பேர் கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

காத்தான்குடி பிரதேசத்தின் பல்வேறு இடங்களிலும் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய 3 பெண்கள் உட்பட 31 சந்தேகநபர்களை கடந்த ஒரு வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக, காத்தான்குடி குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

ஐஸ், கஞ்சா போதைப்பொருள், சட்டவிரோத மதுபானப் பாவனை மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களையே கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி, தாழங்குடா, நொச்சிமுனை, கல்லடி உள்ளிட்ட இடங்களிலேயே இச்சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதாகவும், இச்சந்தேகநபர்களிடம் விசாரணை நடத்தி வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## தாண்டவன்வெளியில் விபத்து; ஒருவர் காயம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பின் தாண்டவன்வெளி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர்.

கடந்த ஞாயிறு மாலை பிரதான வீதியை இவ்வயோதிபர் கடக்க முற்பட்ட போது, மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவை நோக்கிச் சென்ற சிறிய ரக லொறி மோதி விபத்துச் சம்பவித்ததாக, மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் அதிகூடிய வேகமே விபத்துக்கு காரணமெனத் தெரிவித்த பொலிஸார், வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் சில சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைப்படகு தொழிலை நிறுத்த கோரி யாழில் ஆர்ப்பாட்டம்

**பருத்தித்துறை விசேட, யாழ்ப்பாணம் குறூப், யாழ் நிருபர்கள்**





இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தி நேற்று யாழில் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்கம் உள்ளிட்ட மீனவ அமைப்புக்கள் ஒன்றிணைந்து யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று காலை கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து யாழிலுள்ள இந்திய துணைத்தூதரகம் வரை பேரணியாகச் சென்றனர். இதன் போது இந்திய துணை தூதரகத்திற்கு செல்லும் வழியில் பொலிஸார் இடைமறித்தமையால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தூதரகம் முன்பாக பேரணியை செல்லவிடாது மறியல் போட்டு பொலிஸார் இடைமறித்ததுடன் மீனவ அமைப்புக்களின் எட்டு பிரதிநிதிகளை சந்திப்பதற்கும் அனுமதி வழங்கினர். அதற்கமைய தூதரகத்திற்குள் சென்ற பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் கையளித்தனர்.

இந்நிலையில் பொலிஸாரால் இடைமறிக்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் 'இலங்கை மீனவர்களின் கடல் வளத்தை அழிக்காதே', 'தமிழக மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்து', 'மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# வடக்கின் உதயம்

## நல்லை ஆதீன குருமுதல்வரிடம் ஆசி பெற்ற இந்திய துணைத்தூதர்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத்தூதுவர் செவிதி சாய் முரளி, நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றார். யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. இதன்போது புதிய இந்திய துணைத்தூதுவரை வாழ்த்திய நல்லை ஆதீன குரு முதல்வர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இச்சந்திப்பின் போது அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் உள்ளிட்ட இந்திய துணைத்தூதரக அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவராக செவிதி சாய் முரளி அண்மையில் கடமைகளை பொறுப்பேற்று கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் அடம்பன் பகுதியில் வாகன விபத்து; அருட்தந்தை டிலான் உயிரிழப்பு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் அடம்பன் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட அடம்பன் நாற்சந்தியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த சலேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மரிசால் டிலான் (வயது34) உயிரிழந்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மறைமாவட்ட குருக்களுக்கான தவக்கால தியானம் மன்னார் மடு தேவாலயத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு வீடு திரும்புகையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

மன்னார் அடம்பன் பகுதியூடாக அருட்தந்தை டிலான் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்டமையால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். மேலும் விபத்து தொடர்பான விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கணவனால் கைவிடப்பட்ட இளம் தாய், மகன் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பிவைப்பு



வவுனியாவில், கணவனால் கைவிடப்பட்டு நிர்க்கதியான இளம் தாய் மற்றும் விசேட தேவையுடைய அவரது 07 வயது மகன் ஆகியோர் வடக்கு ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் அபயம் பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாடுக்கமைய ஆளுநர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

ஆளுநரின் ஆலோசனைக்கமைய அபயம் பிரிவினரால், வவுனியா பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து உடனடியாக செயற்பட்ட வவுனியா பிரதேச செயலாளர், சிறுவனையும், இளம் தாயையும் பாதுகாப்பு இல்லத்தில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். சமூக நலன் விரும்பி ஒருவரால் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் அபயம் பிரிவினர் துரித நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாசிப்பும் கலந்துரையாடலும்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் கலந்துகொள்ளும் வாசிப்பும் கலந்துரையாடலும் நிகழ்ச்சி இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் (Arts Seminar Hall) நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் ஐயாத்துரை சாந்தன் தன்னுடைய இலக்கிய எழுத்துக்களிலிருந்து வாசிப்புக்களை மேற்கொள்வார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலொன்றும் நடைபெறவுள்ளது.

ஐயாத்துரை சாந்தன் இந்தியாவில் இலக்கியத்துக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றாகிய "சாகித்திய அக்கடமி" விருது பெற்றவர். அத்துடன் அவர் இலங்கையில் "சாகித்ய ரத்னா" பட்டம் பெற்றவர்.

## மனநலம் குன்றிய பெண் பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகத்தில் 21 வயது இளைஞன் கைது

**(சாவகச்சேரி விசேட நிருபர்)**

சாவகச்சேரி நாவற்குழிப் பிரதேசத்தில் 27 வயது நிரம்பிய மனநலம் குன்றிய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின் பேரில் 21 வயதான இளைஞனொருவன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.




# இலங்கையில் வருடந்தோறும் 400 காட்டு யானைகள் உயிரிழப்பு

## விலங்கியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் அசோக்க தெரிவிப்பு

**(அக்குறணை குறூப் நிருபர்)**

இலங்கையில் வருடந்தோறும் 400 காட்டு யானைகள் அழிவடைந்துவருவதாக பேராதனைப் பல்கலைக் கழக விலங்கியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி அசோக்க தங்கொல்ல தெரிவித்தார்.

சர்வதேச வனவிலங்கு பாதுகாப்பு தினத்துக்கு இணையாக கண்டி 'சிட்டி சென்டர்' நிலையத்தில் வனவிலங்குகள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியொன்று அண்மையில் நடைபெற்றது. 'ஹுஸ்ம' (மூச்சு) என்ற அமைப்பு இப்புகைப்படக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடந்தோறும் சராசரி 400 காட்டு யானைகளும் 80 மனித உயிர்களும் யானை மனிதமோதல் காரணமாக உயிரிழப்பதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன. அப்படியென்றால் இன்னும் சில காலங்களில் இலங்கையில் யானைகள் இல்லாது போகும் ஒரு நிலை உருவாகலாம். உலகில் இலங்கை உட்பட 13 நாடுகளில் மட்டுமே காட்டு யானைகள் உள்ளன. இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் வேகமாக இவை அழிவடைந்து வருவது பாரிய பிரச்சினையாகும். எனவே அதற்கு பொருத்தமான மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இதுதொடர்பில் புகையிரத திணைக்களம் ஊடாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சுரங்க வழி அமைத்தல், ஒலி எழுப்புதல் போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் இப்போது நடைமுறையில் மின்சார வேலிகள் இருந்தாலும் அவை எப்போதும் நிலையாக இருக்குமென எதிர்பாக்க முடியாது என அவர் தெரிவித்தார்.



பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் கே.பி. ரனவன, பேராசிரியர் சாலியா குலரத்ன, கலாநிதி டப்ளியூ.ஏ.ஜி.எஸ். விஜேசுந்தர, 'ஹுஸ்ம'அமைப்பின் தலைவர் கெலும் மஹேஸ், மத்திய மாகாண விவசாய சுற்றாடல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சமிந்த அபேரத்ன உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் விபத்து இருவர் படுகாயம்

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேன பகுதியில் நேற்று காலை (05) இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அருகிலிருந்த பஸ் மீது மோதியதில் மோட்டார் சைக்கிள் சாரதியும் பின் இருக்கையில் பயணித்த இளைஞனும் படுகாயமடைந்த நிலையில் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் எதிர்திசையில் பயணித்த இ.போ.ச பஸ்ஸூடன் மோதியமையால் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

## இ.போ.ச. பஸ் –லொறி மோதி விபத்து; பஸ் சாரதி கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை எல்லேபொல பகுதியில் லொறி இ.போ.சபை பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் லொறி சாரதி ஆபத்தான நிலையில் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளையிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹோமாகம டிப்போவுக்கு சொந்தமான இ.போ.ச பஸ்ஸும் பலாங்கொடை நகரத்தை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த லொறியும் எதிர் எதிரே மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





கண்டி தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் மலையக மக்களின் வாழ்வியலும் கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் நூற்றாண்டு நிறைவும் என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட கட்டுரை மற்றும் சித்திரப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கண்டி பிரதான தபால் நிலைய கேட்போர் கூடத்தில் கண்டி தமிழ் சங்கத்தின் தலைவர் டொக்டர் தி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழக பொறியியற் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. நவரட்ணராஜா கலந்து சிறப்பித்தார். இதன்போது பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறைப் பேராசிரியர் ஜோதிமலர் ரவீந்திரன், பேராதனை பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ஜெப்ரி ரவீந்திரன், தேசமானிய பீ. பழனியப்பன், கண்டி வர்த்தக சங்கத் தலைவர் பீ. குமாரதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)






கலஹா பிரதேசத்தில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கலஹா லயன்ஸ் கழக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கலஹா பிரதேச மக்கள் மற்றும் கண்டி மனித அபிவிருத்தி நிறுவனம் ஆகியவை இணைந்து நடாத்திய இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.பி. சிவப்பிரகாசம் கலந்து சிறப்பித்தார். இப்பிரதேசத்திலுள்ள 250ற்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்கள், தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# அமைச்சரவை முடிவுகள்



**01. முதலீட்டுப் பணிகளுக்காக அரச மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களிடமுள்ள காணிகள், முறையான வகையில் விடுவிப்பதற்காக காணி முகாமைத்துவப் பொறுப்பு நிதியத்தைத் ஸ்தாபித்தல்;**

எமது நாட்டின் மொத்த நிலப்பரப்பின் 82 வீதமான நிலம் அரசுக்குச் சொந்தமாகக் காணப்படுவதுடன், குறித்த காணிகளின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் பல நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த நிறுவனங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கையாளாமல் இருப்பதால், அரச காணிகளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கும் போது பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், புதிய தொழிற்சாலைகள் மற்றும் சேவைகளை உருவாக்குதல் மற்றும் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு இயலுமாகும் வகையிலான முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்காக, பொருத்தமான காணிகளை அடையாளங்காணும் சந்தர்ப்பத்திலிருந்து வெளிப்படையான பொறிமுறையைக் கடைப்பிடித்து முதலீட்டாளர்களுக்கு முறைசார்ந்த வகையில் காணிகளை விடுவித்தல் வரைக்குமான சரியான அதிகாரங்களைக் கொண்ட பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

அதற்கமைய, அரச மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களிடமுள்ள காணிகளை முதலீட்டாளர்களுக்கு விடுவிப்பதற்குரிய பொருத்தமான விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**02. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப (ICT) கல்வியை மேம்படுத்துவதன் மூலம் தொலைத்தொடர்பு தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல்;**

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்திற்கமைய பொருளாதார விருத்தி மற்றும் புத்தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப (ICT) கல்வியை மேம்படுத்துவதன் மூலம் தொலைத்தொடர்பு தொழிற்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளதுடன், தொலைத்தொடர்பு தொழிற்துறையின் பேண்தகு அபிவிருத்திக்காக தேவையான திறன்வாய்ந்த தொழில்வாண்மையாளர்களை உருவாக்குவதற்கு இயலுமை கிடைக்கும். அனுமதிப்பத்திர உரிமையாளர்களிடமிருந்து அறிவிடப்படும் தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தின் 50 வீதம் தொலைத்தொடர்பு தொழிற்துறையின் விருத்திக்காக பயன்படுத்துவதற்கோ அல்லது வழங்குவதற்கோ தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**03. பொதுச்சுங்கப் பிணைக்குதம் (Bonded warehouse) நிர்ணயித்தல் தொடர்பான கொள்கைச் சட்டகத்திற்கான அனுமதி;**

இறக்குமதிப் பொருட்களுக்கு வரி செலுத்துவதற்கும் மற்றும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கும் முன்னர் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தரப்பண்பை உறுதிப்படுத்துவதற்கான களஞ்சிய வசதிகள் சுங்க பிணைக்குதம் என அழைக்கப்படும். (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் விதந்துரைக்கமைய நிதி விடயதானத்திற்குப் பொருத்தமான அமைச்சருக்கு சுங்கப் பிணைக்குதத்தினை நிர்ணயிக்கலாம்.

**04. பணையத் தீ நிரலுக்கு (Ransomware) எதிரான சர்வதேச தொடக்கமுயற்சி மாநாடு;**

பணையத் தீநிரலை (Ransomware) ஒழிப்பதற்காக சர்வதேச ஒருங்கிணைப்புக்காக ஐக்கிய அமெரிக்கா மேலும் பல நாடுகளுடன், 2021 ஆம் ஆண்டில் பொதுத்தளமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பணையத் தீ நிரலுக்கு (Ransomware) எதிரான சர்வதேச தொடக்க முயற்சிப் படிமுறைகளுடன் இணைந்து கொள்ளுமாறு இலங்கைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த தொடக்கமுயற்சிகளுக்காக உலகளாவிய ரீதியில் 48 நாடுகளும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச பொலிசாரும் இணைந்துள்ளனர். இலங்கை அண்மையில் பணையத் தீ நிரலுக்கு (Ransomware) காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், பணையத் தீ நிரலுக்கு (Ransomware) எதிரான சர்வதேச தொடக்கமுயற்சிகளுடன் இணைந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**05. ஒரு மெகாவாற் இயலளவு கொண்ட இரண்டு மிதப்பு சூரிய மின்னுற்பத்தி முன்னோடிக் கருத்திட்டங்கள் சந்திரிக்காவாவி நீர்த்தேக்கத்தின் மேற்பரப்பிலும் கிரிஇப்பங்வாவி நீர்த்தேக்க மேற்பரப்பில் ஆரம்பித்தல்;**

கொரிய அரசின் Korea Institute for Advancement of Technology மற்றும் இலங்கை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கும் இடையில் கையொப்பமிடப்பட்டு கலந்துரையாடல் குறிப்புக்கமைய, சந்திரிக்காவாவி மற்றும் கிரிஇப்பங்வாவி நீர்த்தேக்கங்களில் ஒரு மெகாவாற்று இயலளவு கொண்ட இரண்டு (02) மிதப்பு சூரிய மின்னுற்பத்தி நிலையங்களின் முன்னோடிக் கருத்திட்டங்களுக்கு ஏற்புடைய மின்னுற்பத்தி நிலையம் மற்றும் மின்மாற்றி உபநிலையங்களை நிர்மாணித்தல், பராமரிப்புத் தொழிலாளர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் சூரிய மின்தகடுகளை பராமரித்தல் போன்ற பணிகளுக்காக எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிரிஇப்பங்வாவி நீர்த்தேக்கத்தின் நீர்ப்பரப்பில் 0.99 ஹெக்ரயார் அளவிலான பகுதி மற்றும் குறித்த நீர்த்தேக்கத்தின் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தில் 0.1 ஹெக்ரெயார் அளவிலான காணித்துண்டுகளை வழங்குமாறு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**06. இலங்கையின் பண்டாரநாயக்க இராஜதந்திர பயிற்சி நிறுவனம் (BIDTI ) மற்றும் நேபாளத்தின் வெளிவிவகார நிறுவனத்திற்கும் ((IFA) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்;**

இலங்கையின் பண்டாரநாயக்க இராஜதந்திர பயிற்சி நிறுவனம் (BIDTI ) மற்றும் நேபாளத்தின் வெளிவிவகார நிறுவனத்திற்கும் (IFA) இடையில் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சிப் பரிமாற்றங்களை அதிகரிக்கும் நோக்கில் 2018.09.01 தொடக்கம் 04 வருடங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலப்பகுதி 2022 ஆண்டில் முடிவடைந்துள்ளது. இருதரப்பு உடன்பாட்டுக்கமைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் செயற்பாட்டுக் காலப்பகுதியை ஐந்தாண்டுக்கு (05) ஒருமுறை நீடிப்பதற்கும் இயலுமாகும் வகையில் ஏற்பாடுகளை திருத்தம் செய்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட முடிவு.

**07. 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்கு விதிகள்;**

1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(6) ஆம் பிரிவின் மூலம் சமாதான நீதவான்களின் பதவியை இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் முடிவுறுத்துகை போன்ற ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் நீதித்துறை விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகள், அதன் பின்னர் குறித்த கட்டளைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் கிரமமாக 2023.11.27 மற்றும் 2024.02.13 திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

**08. விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்;**

உலகில் நவீன தொழிநுட்பம் மற்றும் புதிய அறிவைப் பயன்படுத்தி விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல் மற்றும் பாரிய பரிமாற்றங்களை ஏற்படுத்திய ஏனைய நாடுகளை மாதிரியாகக் கொண்டு இலங்கையின் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் விவசாய மற்றும் மீன்பிடித்துறை நவீனமயப்படுத்தல் சபைகளைப் பலப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 2.5 பில்லியன் ரூபாய்களைப் பயன்படுத்தி விவசாய நவீனமயப்படுத்தல் மத்திய நிலையத்தை உருவாக்கி குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால திட்டமிடல்களுக்கமைய நாடளாவிய ரீதியில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**09. வரலாற்றுப் புகழ்வாய்ந்த சீதாவக்க பிரதேச நூதனசாலையை தாபித்தல்;**

1521 ஆம் ஆண்டில் உருவாகிய இராசதானிகளில் சிறப்புவாய்ந்த திருப்புமுனைகளாக அமைகின்றதும் ஆனாலும், குறித்த இராசதானியின் பிரதேச அடையாளங்களைக் காட்சிப்படுத்துவதற்கு இதுவரை ஒரு இடமும் ஒதுக்கப்படவில்லை. அதனால், சீதாவக்க இராசதானி காலத்தில் தயாரிக்கப்பட்ட சிங்கள துப்பாக்கி, சிங்கள வாள் உள்ளிட்ட போர் உபகரணங்கள், நிறுவை, அளவை மற்றும் அகழ்வு உபகரணங்கள் போன்ற தொல்லியல் பொருட்களும், சீதாவக்க இராசதானிக்குச் சொந்தமான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போதும், மக்களிடமுள்ள பொருட்களும் அடையாளங் காணப்பட்ட பண்டையகாலத்திற்குரிய கற்கருவிகள், பண்டையகால மனிதனால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் உணவு தொடர்பான தகவல்களைப் போலவே விலங்குகள் மற்றும் தாவர ஒதுக்கங்களை முறையான வகையில் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்துவதற்காக நூதனசாலையொன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**10. அரச பாடசாலைகளில் 15 ஆம் தரங்களிலுள்ள மாணவர்களுக்கான 'பாடசாலை உணவு வேலைத்திட்டம்' நடைமுறைப்படுத்தல்;**

ஒட்டுமொத்த 1.08 மில்லியன் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் 100 கல்வி வலயங்களிலுள்ள 7,902 பாடசாலைகளில் 'பாடசாலை உணவு வேலைத்திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், ஒரு மாணவருக்கு ஒரு நாள் உணவு வேளைக்கு 85/ பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. சந்தையில் ஏற்படுகின்ற பண்டங்கள் சேவைகளின் விலை ஏற்றத்தாழ்வுகளுக்கமைய ஒருவேளை உணவுக்கு 110/ செலவாவதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

**11. கொழும்பு நகருக்கு அண்மையிலுள்ள பிரதான புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள கட்டிடங்களை வணிக நிலையங்களாக மேம்படுத்தல்;**

கொழும்பு நகருக்கு அண்மையிலுள்ள வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் கொம்பனித்தெரு போன்ற புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள நிலப்பரப்பு மற்றும் கட்டிடங்களை வணிக நிலையங்களாக மேம்படுத்துவதற்கான ஆற்றல்வளங்கள் காணப்படுவதாக 2023.11.06 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த புகையிரத நிலையங்கள் மற்றும் தெஹிவல, கல்கிசை புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள நிலப்பரப்பு மற்றும் கட்டிடங்களை அரசதனியார் பங்குடமையின் கீழ் நிர்மாணித்து, செயற்படுத்தி, ஒப்படைத்தல் பொறிமுறையின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கும் தீர்மானம்.

# மன்னார் – அடம்பன் பிரதான வீதியில் வேகத்தடை அமைக்க கோரிக்கை

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் அடம்பன் பிரதான வீதியிலுள்ள நாற்சந்தியில் வேகத்தடையொன்றை உடன் அமைத்து தருமாறு கோரி அடம்பன் பகுதி மக்கள் நேற்றைய தினம் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அடம்பன் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் அருட்தந்தையொருவர் உயிரிழந்ததையடுத்து இவ்வீதியில் விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறுவதாக தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காபட் வீதி என்ற வகையில் வாகனங்கள் வேகமாக பயணிப்பதால் இவ்வீதியில் வேக தடையொன்றை அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இவ்வீதியில் வேகத்தடையொன்றை அமைக்குமாறு முன்னதாகவே பிரதேச சபை கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் இதுவரை இப்பகுதியில் அமைக்கப்படவில்லையென பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

# யாழில் விமான படை கண்காட்சி; பாடசாலை மாணவர்களுக்கு இலவசம் அனுமதி

(யாழ். விசேட நிருபர்)

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விமானப்படையின் கல்வி மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி யாழ்.முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.



நேற்றையதினம் புதன்கிழமை ஆரம்பமாகும் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சிகள் நடைபெறும் தினங்களில், விமானப்படையின் சாகச நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. இக்கண்காட்சி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகவும், ஏனையோருக்கு நுழைவு கட்டணம் 100 ரூபாவும் அறவிடப்படும்.

இதேவேளை இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ள ஜெட் விமான இயந்திரத்தை கண்காட்சியின் முடிவில், விமான படையினர் யாழ்.பல்கலைகழகத்திற்கு அன்பளிப்பு செய்யவுள்ளனர்.



அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் கிராமிய பாடல் என்ற பிரிவின் கீழ் பங்குப்பற்றி மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்ட ஹல்துமுல்லை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் அப்பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து போட்டியில் பங்குப்பற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவித்தார்.

# தெஹிவளை அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய இலட்சார்ச்சனை விழா



தெஹிவளை அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தின் 9ஆவது வருடாபிஷேக இலட்சார்ச்சனை விழா இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளின் தலைமையில் 9 ஆம் வருட இலட்சார்ச்சனை பூஜை ஆரம்பித்து தொடர்ந்து 10 நாட்கள் காலையும் மாலையும் விசேட பூஜைகளும் தீப ஆராதனைகளுடனும் நடைபெற்று எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேயப் பெருமானுக்கு அதிவிசேட திரவியங்களைக் கொண்ட வலம்புரிச் சங்குகளினால் அபிஷேகம், விசேட பூஜைகள் என்பன நடத்தப்படவுள்ளன.

# முதியவர் சடலம் மீட்பு

(வவுனியா விசேட நிருபர்)

ஓமந்தை, நாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள நீர்நிலையிலிருந்து முதியவரொருவரின் சடலம் அழுகிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் ஓமந்தை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் அழுகிய நிலையில் உள்ளமையால் சில தினங்களுக்கு முன்னர் இவர் இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஓமந்தை பொலிஸார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

## மாத்தறை புனித தோமஸ் கல்லூரி

# பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

மாத்தறை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கொழும்பு கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும் ஆதிவாசி பழைய மாணவர் இரவு களியாட்டநிகழ்வும்எதிர்வரும் 09ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6:00 மணிக்கு பத்தரமுல்லையிலுள்ள அபே கமயில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முன்னாள் மாணவர்களான மாத்தறை பெரியாஸ் பத்திரியின் விசேட வைத்திய நிபுணர் எஸ்.கே.சமீர விஜேசிங்க மற்றும் ருஹுனு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி சுபாஷ் ஜயசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்று மாலை சாத்ரா இசைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளதுடன், அனைத்து புனித தோமஸ் பழைய மாணவர்களையும் பங்குபற்றுமாறு புனித தோமஸ் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை அழைப்பு விடுத்துள்ளது.

மேலதிக தகவல்களை விஜயா 0714787386, ஜயவீர 0777768299 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.



சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் 4வது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம் மாத்தளை பௌத்த மந்திர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அதிக தடவை இரத்ததானம் வழங்கிய மாத்தளை பொலிஸ் நிலைய பிரஜா பொலிஸ் பரிசோதகர் பியந்த ஜயசேகரவுக்கு ஊடகவியலாளர் சங்கத்தினால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டகொட, மாத்தளை பொலிஸ் அதிகாரி, அரச உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# பெறுகை அறிவித்தல் – இலங்கை இராணுவம்

## 2024ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு வாகன திருத்தவேலைகள், வாகன உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விரிவாக்கக்கூடிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

1. **2024ஆம் வருடத்தினுள் இலங்கை இராணுவத்திற்குரித்தான பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.**
   அ. சகல சேவைகள் மற்றும் பொருட்களையும் கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அமைவிடத்திற்கு வழங்குதல் வேண்டும்.
   ஆ. இதில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி (1000 மணித்தியாலம்) முதல் பிற்பகல் 3.00 மணி (1500 மணித்தியாலம்) வரை உருப்படிகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள திகதிகளில் ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள மின்சாரம் மற்றும் பொறிமுறை பொறியியல் பணிப்பாளர் சபையிடமிருந்து (வாகனத் தரிப்பிட இடப்பரப்பு) அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்காகவும் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவ நிதிப் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்தில் (பொருள் வகை) வழங்குவதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' கேள்வி இலக்கம் (DEME/.............) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

### வாகனத் திருத்தவேலைகள்

**வாகன உதிரிப்பாகங்கள்**

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப் படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | DEME/LA/5BN/V/240048 | டொயோட்டா ஹைலக்ஸ் கெப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 2 | DEME/LA/5BN/V/240049 | இசுசு Cxy Recovery முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 3 | DEME/LA/CBO/V/240050 | டொயோட்டா ஹைஎஸ் வேன் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 4 | DEME/LA/4BN/V/240051 | மிட்சுபிஷி L300 அம்பியூலன்ஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 5 | DEME/LA/CBO/V/240052 | மைக்ரோ அம்பியூலன்ஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 6 | DEME/LA/CBO/V/240053 | டொயோட்டா ஹைலக்ஸ் கெப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 7 | DEME/LA/3BN/V/240058 | டாடா LPT 15 x 12 ஸ்டார் பஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 8 | DEME/LA/1BN/V/240059 | இசுசு டபள் கெப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 9 | DEME/LA/3BN/V/240060 | இசுசு டபள் கெப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 10 | DEME/LA/KTB/V/240062 | லேன்ட் ரோவர் TDI ஜீப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 4 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 11 | DEME/LA/KTB/V/240063 | லேன்ட் ரோவர் TDI ஜீப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 3 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 12 | DEME/LA/KTB/V/240064 | லேன்ட் ரோவர் TDI ஜீப் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 2 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 13 | DEME/LA/UDA/V/240068 | டாடா LPT 709 டிரக் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 14 | DEME/LA/UDA/V/240069 | டாடா 1510 பஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 15 | DEME/LA/UDA/V/240070 | டாடா 1510 பஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 16 | DEME/LA/UDA/V/240071 | டாடா 1510 பஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 17 | DEME/LA/UDA/V/240072 | அசோக் லேலண்ட் கொமட் நீர்த்தாங்கி பவுசர் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 18 | DEME/LA/UDA/V/240073 | அசோக் லேலண்ட் கொமட் 4x4 நீர்த்தாங்கி பவுசர் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 19 | DEME/LA/UDA/V/240074 | டாடா 1212 நீர்த்தாங்கி பவுசர் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 20 | DEME/LA/ I BN/V/240075 | கொள்கலன் பெட்டியின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | 6 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 21 | DEME/LA/1BN/ V/240076 | டாடா ஸ்டார் பஸ் வாகனத்தின் முழுமையான திருத்தவேலைகள் | NCB | I | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/10 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 22 | DEME/LA/BIOMEDICAL/E/243001 | குழாய் மருத்துவ வாயு முறைமையை நிறுவுதல் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 23 | DEME/LA/BIOMEDICAL/H/245001 | சகல துணைப்பாகங்களுடனான PCR Analyzer திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 24 | DEME/LA/CBO/E/233053 | Bumyang வளிச்சீராக்கி முறைமையின் திருத்தவேலைகள் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 12,500.00 |
| 25 | DEME/LA/UDA/V/240077 | டிரக்கை வாகனம் ஏற்றிச்செல்லும் வாகனமாக (ஊயச ஊயசசநைச) நவீனமயப்படுத்துதல் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |

**வாகன உதிரிப்பாகங்கள்**

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப் படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக் கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | EME/DTE/LP/04/2024/CBO/026 | டொயோட்டா லேண்ட் குறுசர் ஜீப் வாகனத்திற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் | NCB | 53 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 2 | EME/DTE/LP/04/2024/KTB/001 | லேன்ட் ரோவர் 300 TDI ஜீப் வாகனத்திற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் | NCB | 123 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 3 | EME/DTE/LP/04/2024/UDA/005 | டாடா 1313 (4x4) டிரக் வாகனத்திற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் | NCB | 227 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 4 | EME/DTE/LP/04/2024/UDA/006 | டாடா 1313 (4x4) டிரக் வாகனத்திற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் | NCB | 182 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 5 | EME/DTE/LP/04/2024/UDA/009 | புத்தம் புதிய டாடா LPT 709 என்ஜின் 01 மற்றும் டாடா 1510 பஸ் என்ஜின் 03 கொள்வனவு செய்தல் | NCB | 4 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 6 | EME/DTE/LP/04/2024/ARTY/001 | மறுசீரமைக்கப்பட்ட லேன்ட் ரோவர் 300 TDI - 18L என்ஜின் கொள்வனவு செய்தல் | NCB | 1 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 7 | EME/DTE/PROJECT/ IRONHOSE/ 2023/01 (A) | அயன் ஹோர்ஸ் வாகனத்திற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் (MODEL: TIEMA XC2200) | NCB | 7 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |

**விசேட வாகனங்களுக்கான என்ஜின் எஸம்பிள்களைக் கொள்வனவு செய்தல்**

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப் படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக் கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | EME/DTE/PROJECT/IRONHOSE/ 2023/08 | அயன் ஹோர்ஸ் வாகனத்திற்கான புத்தம் புதிய முழுமையான என்ஜின் எஸம்பிள்களைக் கொள்வனவு செய்தல் (MODEL: TIEMA XC2200) | NCB | 3 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |

**பல்வேறு வகையான வயர் / ஹார்ட்வெயார் பொருட்கள் / மரம் / வாயுக்கள் / இரும்பு / பெயின்ட் / தினர் உருப்படிகளைக் கொள்வனவு செய்தல்**

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | | NCB/ ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக் கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | DEME/EXP/06/2024/19 | பல்வேறு வகையான வயர்களைக் கொள்வனவு செய்தல் | Wire LT 30m Roll | NCB | 800 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | | 3Core 15Amp Wire 100m Roll | | 10 | எண்ணிக்கை | | | |
| | | | Battery Wire | | 400 | மீற்றர் | | | |
| 2 | DEME/EXP/06/2024/20 | பல்வேறு வகையான ஹார்ட்வெயார் உருப்படிகள் மற்றும் மரங்களைக் கொள்வனவு செய்தல் | | NCB | 107 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 3 | DEME/EXP/06/2024/21 | வாயுக்களை கொள்வனவு செய்தல் | AC Gas Cylinders | NCB | 285 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | | Oxygen and Nitrogen | | 2465 | $m^3$ | | | |
| | | | Acetylene | | 1050 | கி.கிராம் | | | |
| 4 | DEME/EXP/06/2024/22 | பல்வேறு வகையான இரும்பு சீட்கள், தட்டையான இரும்பு மற்றும் கோண இரும்பைக் கொள்வனவு செய்தல் | MS Sheets, Zink Coaled, Aluminium | NCB | 680 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | | Flat Iron, Angle Iron | | 400 | எண்ணிக்கை | | | |
| 5 | DEME/EXP/06/2024/23 | பல்வேறு வகையான பெயின்ட், 2K பெயின்ட், தின்னர் மற்றும் கெட்லோய் பசை கொள்வனவு செய்தல் | Paint | NCB | 735 | லீற்றர் | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | | 2K Paint | | 510 | எண்ணிக்கை | | | |
| | | | Thinner | | 4300 | லீற்றர் | | | |
| | | | Cataloy Paste | | 250 | எண்ணிக்கை | | | |
| 6 | DEME/EXP/06/2024/24 | MS சீட்கள் மற்றும் கோண இரும்புகளைக் கொள்வனவு செய்தல் | | NCB | 99 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 7 | EME/DTE/PROJECT/ IRONHOSE/2023/04 | பல்வேறு வகையான ஹார்ட்வெயார் உருப்படிகளைக் கொள்வனவு செய்தல் | | NCB | 80 | வரிசை உருப்படி | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 8 | EME/DTE/PROJECT/ IRONHOSE/2023/05 | பல்வேறு வகையான இரும்பு சீட்கள், தட்டையான இரும்பு மற்றும் கோண இரும்பைக் கொள்வனவு செய்தல் | | NCB | 66 | எண்ணிக்கை | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 9 | EME/DTE/PROJECT/ IRONHOSE/2023/06 | பல்வேறு வகையான பெயின்ட், தினர் மற்றும் கெட்லோய் பசை கொள்வனவு செய்தல் | Paint | NCB | 376 | லீற்றர் | 2024/03/06 முதல் 2024/04/05 | 2024/04/08 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | | Thinner | | 450 | லீற்றர் | | | |
| | | | Cataloy Paste | | 50 | எண்ணிக்கை | | | |

2. குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியில் மற்றும் சர்வதேச போட்டி ரீதியில் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு முடிவுறுத்தப்படும் காலம் முடிவடைதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் சேவை இடத்தின் கடிதத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

   **தலைவர்,**
   **இராணுவ பெறுகைக் குழு,**
   **மே/பா யுத்த உபகரண முதன்மை கட்டளைப் பிரிவு,**
   **இலங்கைத் தரைப்படை தலைமையகம்,**
   **ஸ்ரீ ஜயவர்தனபுர,**
   **கொழும்பு.**

4. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வழங்குநர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீடுகளின் போது இயைபுடைய தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.
   அ) நிதிய இயலுமை
   ஆ) திருப்திகரமான வரி செலுத்தல் அறிக்கைகள்
   இ) போதுமான திருத்த வேலைகளைச் செய்தல் / வழங்கும் இயலுமை
   ஈ) போதுமான களஞ்சிய வசதிகள்
   உ) போதுமான பணியாளர், ஆளணி மற்றும் அலுவலக வசதிகள்
   ஊ) போதுமான போக்குவரத்து வசதிகள்
   ஈ) வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி அல்லது கடந்த மூன்று வருடங்களுக்கான செயற்பாட்டு அறிக்கையுடனான கூட்டிணைப்புச் சான்றிதழ்
5. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் வெட் பதிவிலக்கத்தை வெளிப்படுத்துதல் கட்டாயமாகும்.
6. முழுமையற்ற மற்றும் தேவையான ஆவணச் சாட்சிகள் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யும் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.
7. உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறியத்தரப்படும்.
8. வழங்குநர்களுக்கு காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 011-3070478 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக பெறுகை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

# 'இனங்களுக்கு இடையில் சமாதானத்தை கட்டியெழுப்புதல்'; மாளிகைக்காட்டில் மாநாடு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும் நல்லுறவையும் கட்டியெழுப்பும் வகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள துறை சார்ந்தவர்களை ஒன்றிணைத்து அவர்களின் கருத்துகளை கேட்டறியும் முகமாக கெப்சோ அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட சமாதான மாநாடு, மாளிகைக்காடு பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (05) நடைபெற்றது.

கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் சுவிற்ஸர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் அதிதிகளாகவும், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

'சமூக மட்டத்தில் நல்லுறவைக் கட்டியெழுப்புதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களிலான நிகழ்வுகளை அடுத்து, மாகாண மட்டத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது இன நல்லுறவை ஏற்படுத்துவதில் சமூக மட்டத்தில் காணப்படும் சவால்களை கண்டறிந்து அதற்கான முன்மொழிவுகள் துறைசார் சமூக ஆர்வலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

இதன்போது முக்கிய 6 விடயப் பரப்புகளில் 17 வகையான முன்மொழிவுகள் துறை சார்ந்தவர்களால் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம். நௌஷாட் மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்தினார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி அஸ்லம் சஜா, எம்.வை.மின்னதுல் சுஹீரா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.




மேலும், சமூகங்களுக்கு இடையில் சமாதானத்தை கட்டியெழுப்ப செயற்பட்டவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அதிதிகள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இம்மாநாட்டில் மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூக முக்கியஸ்தர்கள், பொதுநல அமைப்புகளின் பிரதிநிதிகளெனப் பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்ட மதிப்பீட்டுக்கு கல்முனை மாநகரசபை தெரிவு

சாய்ந்தமருது விசேட, கல்முனை விசேட நிருபர்கள்



கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான செயற்றிறன் மதிப்பீட்டின் போது, கல்முனை மாநகரசபை கூடிய புள்ளிகளை பெற்று தேசியமட்ட மதிப்பீட்டுக்கு தெரிவாகியுள்ளதாக, அம்மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் ஆகியவற்றின் கண்காணிப்பின் கீழ் சுயாதீனமான நடுவர்களால் மாகாணமட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை மாநகரசபையால் கடந்த வருட ஆரம்பம் முதல் முன்னெடுக்கப்பட்டு வந்த நிர்வாக சீர்படுத்தல், சீரான ஆளணி முகாமைத்துவம், திட்டமிட்ட உட்கட்டமைப்பு விருத்தி, நவீனமயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலக வசதி ஆகியவை உட்பட மாநகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் குழுவின் அயராத முயற்சியின் பயனாக இம்மதிப்பீட்டில் பாரிய வளர்ச்சியை வெளிக்காட்டிய அடிப்படையில் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபை முன்னிலைக்கு வந்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# அஸ்வெசும 2ஆம் கட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்

## அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர்

ஒலுவில் விசேட நிருபர்



அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

இதற்குத் தகுதியானவர்கள் விண்ணப்பங்களை தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோரினூடாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறும், அவர் கேட்டுள்ளார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத சமுர்த்தி பெறுபவர்கள், முதியோர்கள், விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவித்தொகை பெறுவோர்கள் மற்றும் நலன்புரி கொடுப்பனவுகளை எதிர்பார்ப்பவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

அஸ்வெசும முதலாவது கட்டத்துக்காக விண்ணப்பிக்க முடியாது போன அல்லது விண்ணப்பிக்கத் தவறிய நலன்புரி நன்மைகளை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அனைவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

தற்போது ஏதேனும் நலன்புரிவு திட்டத்தில் பயன் பெறுபவராயின் அதன் தன்மை அல்லது யாதேனும் நலன்புரி முன்மொழிவு திட்டத்தில் காத்திருப்பு பட்டியலில் இருப்பவராயின் அதன் தன்மையும் குறிப்பிட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

## சுவாமி விபுலானந்தர்

# பிறந்த இடத்துக்கு திருமலை ஆசிரியைகள் விஜயம்

காரைதீவு குறூப் நிருபர்



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் பிறந்த இடத்துக்கு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/ 92 அணியினரின் திருகோணமலை மாவட்ட ஆசிரியைகள் முதன்முறையாக நேற்று முன்தினம் விஜயம் செய்தனர்.

இதன்போது விபுலானந்த அடிகளாரின் இல்லம், அரும்பொருள் காட்சியகம், பிரார்த்தனையகம், மணி மண்டபம், திருவுருவச் சிலைகள் போன்றவற்றை இவர்கள் பார்வையிட்டனர்.

கிழக்கில் பிறந்த பெரும் மகான் ஒருவரின் இல்லத்தை வாழ்க்கையில் முதன்முறையாக இப்போதாவது பார்க்கக் கிடைத்தமை ஒரு பாக்கியமே என, இவர்கள் தெரிவித்தனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கல்முனையில் வீடுகள் கையளிப்பு

பெரியநீலாவணை விசேட நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (04) நடைபெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் 2023ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பணி முன்னெடுக்கப்பட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் தெரிவு செய்யப்பட்ட 34 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 10 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த வீடுகளை முதற்கட்டமாக பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் பிரதம அதியாக கலந்து கொண்டு பயனாளிகளிடம் கையளித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீரங்கன் உட்பட பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பயனாளிகளெனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கலன்பிந்துனுவெவ துனுமண்டலாவ கிராமத்தின் பிரதான வீதி புனரமைப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் பங்கேற்பு

(திறப்பனை தினகரன் அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள் )



ஹொரொவ்பத்தான தேர்தல் தொகுதிக்குட்பட்ட கலன்பிந்துனுவெவ துனுமண்டலாவ கிராமத்தின் பிரதான வீதியினை "கார்பட்" இட்டு செப்பனிடும் பணிகள் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானுவால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

துனுமண்டலாவ கிராம வீதியானது, சேதமடைந்திருந்த நிலையில், குறித்த வீதியூடாக பயணிக்கும் பொது மக்கள் போக்குவரத்து செய்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த வீதியின் நிலை பற்றி பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானுக்கு தெரியப்படுத்தியதைடுத்து, அவர் குறித்த விடயத்தினை பெருந்தெருக்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுச் சென்றுள்ளார்.

அதன்படி, 2024 ஆம் ஆண்டின் "1500 கி.மீ வீதிகளை அபிவிருத்தி செய்தல் புதிய நாடு புதிய பாதை" என்ற வேலைத்திட்டத்தின் கீழ், போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய, குறித்த வீதியினை புனர் நிர்மாணம் செய்வதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, துனுமண்டலாவ இலுக்வெவ சந்தி முதல் வெலிகொல்லாவ வரையிலான 02 கி.மீ வீதியில் கார்பட் இடும் பணிகள் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், மதவாச்சி பிரதேச வீதி அபிவிருத்தி பொறியியலாளர் காரியாலயத்தின் பிரதான பொறியியலாளர், கலன்பிந்துனுவெவ பிரதேச சபையின் செயலாளர் உட்பட பொது மக்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து



(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து அநுராதபுரம் பாதணிய பிரதான வீதியின் தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் (04) இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், கல்கமுவ கிரிபாவ பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மூவரும் தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தலாவ அநுராதபுரம் பகுதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் அநுராதபுரம் கல்கமுவ பகுதிக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கும் தலாவ பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கந்தானையில் துப்பாக்கிச்சூடு : ஒருவர் கைது

கந்தானை பிரதேசத்தில் இறைச்சி கடை உரிமையாளர் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கந்தானை பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும், 45 தோட்டாக்கள் மற்றும் 2 மெகசீன்களும் விசேட அதிரடிப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். டுபாயில் பதுங்கியிருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான சூட்டி மல்லி கப்பம் கேட்டு துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அதன்படி, பமுனுகமவில் உள்ள சூட்டி மல்லி என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாயின் மடியில் இருந்து நழுவி விழுந்த குழந்தை; காப்பாற்றிய சாரதிக்கு பரிசு வழங்கும் பொலிஸார்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கிதுல்கல பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த தாயொருவரின், மடியில் இருந்து நழுவி வீதியில் விழுந்த கைக்குழந்தையை மீட்டு, குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய வேன் சாரதிக்கு பொலிஸ் திணைக்களம் பரிசு வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

தாய், தந்தையுடன் 6 மற்றும் 3 வயதுகளையுடைய குழந்தைகள் மற்றும் ஒருமாத வயதுடைய குழந்தையுடன் சிவனொளிபாதமலை யாத்திரைக்கு சென்று கொண்டிருந்தபோது தாயை அறியாமல் ஒரு மாதக் குழந்தை தாயின் மடியில் இருந்து வீதியில் விழுந்துள்ளது.

இந்நிலையில், குழந்தை வீதியில் விழுந்ததை அறியாது, அவர்களது முச்சகரவண்டி முன்னோக்கிச் சென்றுள்ளது.

இதன்போது, குறித்த வீதியில் பயணித்த, ருவன் சஜித் என்ற இந்த வேன் சாரதி, குறித்த குழந்தையை மீட்டு கிதுல்கல பொலிஸாரின் மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்க ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இந்த முன்மாதிரியான செயற்பாட்டை மேற்கொண்ட வேன் சாரதியை பாராட்டுவதற்கும் பரிசுப் பொருள் வழங்கி ஊக்கப்படுத்தவும் பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக கிதுல்கல பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

வத்துகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட கும்புக்கந்துறை அல்ஹிக்மா வித்தியாலய மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள், புத்தகப்பைகள், பாதணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தெஹிவளை அல்முஸ்லிமாத் அமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் சங்கத்தின் தலைவர் ஏ.எப்.எம்.நிலார், செயலாளர் எஸ்.எம், ஹனீப், மஸ்ஜிதுல் அக்பர் ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் ராபிக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று

(நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

சிலாபம் கல்வி வலயப் பிரிவிலுள்ள கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் இன்று (6) புதன்கிழமை மாலை 1மணியளவில் ஆரம்பமாகவுள்ளன.

இந் நிகழ்வானது வித்தியாலய அதிபர் எஸ். சப்ராஸ் மொஹமட் தலைமையில் நடைபெறவுள்ளது. குறித்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளுக்கான பரிசளிப்பு விழாவில் உள் நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அசோக பிரியந்த, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் முன்னாள் அமைச்சர் தயாசிறி த திசேரா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ அதிதியாக சிலாபம் கல்வி வலையத்தின் கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.ரீ.என். பிரஷாட் இரத்நாயக்க கலந்துக்கொள்ளவுள்ளவுள்ளார்.

பழைய மாணவர் சங்கம் மற்றும் கொட்டராமுல்ல கல்வி அபிவிருத்தி சங்கம் ஆகியவை இணைந்து குறித்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதி அபிவிருத்தி அதிகார சபையின் புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்

## அமைச்சர் பந்துல கடிதம் கையளிப்பு

போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சின் கீழுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் புதிய பணிப்பாளர் நாயகமாக பொறியியலாளர் பிரியந்த சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக்கடித்தை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன வழங்கி வைத்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரிய பண்டார, மகாசங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை ஆரம்பித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியான பிரியந்த சூரியபண்டார மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பை முடித்துள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பொறியாளராக இணைந்து கொண்ட சிரேஷ்ட பொறியியலாளர் பிரியந்த சூரியபண்டார, பிரதம பொறியியலாளர், திட்டப்பணிப்பாளர் என பல பதவிகளை வகித்த அனுபவம் வாய்ந்த அதிகாரியாவார்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அத்தலுவாகே, முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஷ்ரத்தா வீரகோன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பணியாளர்கள் மற்றும் பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# சிபெட்கோ, ஐ.ஓ.சி,சினோபெக் எரிபொருள் விலைகளில் திருத்தம்

## 95 ஒக்டேன் 09 ரூபாவால் குறைப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

எரிபொருள் விலைகளில் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி, சினோபெக் நிறுவனங்கள் எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்களை செய்துள்ளன.



பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ) 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரை 09 ரூபாவால் குறைத்து, புதிய விலையை 447 ரூபாவாக மாற்றியுள்ளது. அத்துடன் சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 458 ரூபாவாக மாறியுள்ளது. மண்ணெண்ணெயின் விலை லீற்றருக்கு 05 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை 257 ரூபாவாக மாற்றமடைந்துள்ளது. 92 ரக பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசலின் விலைகளில் எந்த வித விலை மாற்றங்களும் மேற்கொள்ளப் படவில்லை. அவற்றின் விலைகள் வழமை போன்றே 92 ரக பெற்றோல் லீற்றர் 371 ரூபாவாகவும், ஒட்டோ டீசல் ஒரு லீற்றர் 363 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் சிபெட்கோ நிறுவனம் போன்றே எரிபொருள் விலைகளை குறைத்துள்ளது. சினோபெக் நிறுவனம் ஒக்டேன் 95 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 09 ரூபாவால் குறைத்துள்ளதால், புதிய விலை 447 ரூபாவாகியுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு, புதிய விலை 458 ரூபாவாகியுள்ளது. 92 ஒக்டேன் லீற்றர் பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசலின் விலையில் அந்த நிறுவனம் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை. அதேவேளை, 92 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 368 ரூபாவாகவும் ஒட்டோ டீசல் ஒருலீற்றர் 360 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவு பொருட்களின் விலைகள் இன்று நள்ளிரவு முதல் குறைப்பு



மின்சார கட்டணம் குறைக்கப்பட்டதால், உணவு பொருட்களின் விலைகளை இன்று நள்ளிரவு முதல் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கோப்பை தேநீர் ஐந்து ரூபாவாலும், ஒரு கோப்பை பால் தேநீர் 10 ரூபாவாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாவாலும், குறைக்கப்படவுள்ளன.

சோற்றுப்பொதி ஒன்று 25 ரூபாவாலும் கொத்து மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகியன 50 ரூபாவாலும் குறைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், உணவுப்பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு நேற்று முன் தினம் அச்சங்கம் தீர்மானித்திருந்தது.

இதேவேளை, உணவுப்பொருட்களின் விலைகளை இந்த வாரத்தில் மீண்டும் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷன் தெரிவித்தார்.

# மகா சிவராத்திரியன்று உலக சைவப் பேரவையின் கொடி தினம்

மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை வழமைபோல இவ்வருடமும் கொடிதினத்தையும் கொடி வாரத்தையும் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

மகா சிவராத்திரி தினமான எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று கொழும்பிலும், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலும் உள்ள பெரும்பாலான சைவ ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பனவற்றில் கொடிதின வைபவம் இடம்பெறும்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது அந்தந்த




மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது.





## அரசாங்க அலுவலர்களின் நலவுதவி சங்கம் (GOBA)
## 115 ஆம் வருடாந்த பொதுக்கூட்ட ஆரம்ப அறிக்கை

சட்ட இல. 11 மற்றும் 13 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதற்கமைவாக 1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அரசாங்க அலுவலர்களின் நலவுதவி சங்கத்தின் கூட்டிணைக்கப்பட்ட சட்டத்தின் 09 ஆம் பிரிவு தொடர்பாக கொழும்பு-07, ரோயல் கல்லூரி, நவரங்கஹலவில் 2024 ஜூன் 15 ஆம் திகதி சனிக்கிழமையன்று அரசாங்க அலுவலர்களின் நலன்புரி சங்கத்தின் 115 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமானது நடாத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென நாம் இத்தால் அறிவிக்கின்றோம்.

1. 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக முகாமைத்துவ குழுவை தெரிவு செய்வதற்காக (தலைவர் பதவி, இரு (2) துணைத் தலைவர்கள் பதவி மற்றும் குழுவிற்கான பன்னிரண்டு (12) அங்கத்தினர்கள்) பெயர் குறித்தல்கள் அழைக்கப்படும்.
2. பெயர் குறித்தல்கள் 2024 மார்ச் 05 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.
3. 2024 மார்ச் 05 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் அங்கத்தினர்களின் முன்மொழிவுகள் மற்றும் விதிகளுக்கான திருத்தங்களை சமர்ப்பிக்கலாம்.

அரசாங்க அலுவலர்களின் நலவுதவி சங்கத்தின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது. 2024.01.01 ஆம் திகதியன்று செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ஐந்து (05) வருட அங்கத்துவத்தையுடைய அங்கத்தினர்கள் பெயர் குறித்தலுக்கான படிவங்களை உத்தியோகபூர்வ வேலை நேரங்களில் செயலாளர் மற்றும் கணக்காளரிடமிருந்து கையேற்கலாம். 4 ஆம் இலக்க விதிகளின் பிரகாரம், விண்ணப்பதாரியொருவர் தம்வசம் வைத்திருப்பதற்கான தேவைப்படுத்தல்கள் மற்றும் பெயர் குறித்தல் விண்ணப்பத்தின் மாதிரி ஆகியன **www.goba.lk** என்ற இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**முகாமைத்துவ குழுவின் கட்டளைப் பிரகாரம்,**
**செயலாளர் மற்றும் கணக்காளர்,**
**அரசாங்க அலுவலர்களின் நலவுதவி சங்கம்.**

**2024 மார்ச் 05 ஆம் திகதியன்று.**
**இல. 65/1, அ.அ.ந.ச. அவென்யு,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் 'ஏ' கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி:- 011-2434598, 2473633, 2473100. தொலைநகல்:- 011-2434212.**
**இணையதளம்: www.goba.lk**



## சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

WP-KG-5204 TOYOTA YARIS- MOTOR CAR - 2008 - RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 015994

108 நிஸான் கார் விற்பனைக்கு

NW-HW-5852 - NISSAN -GF- QU14 - MOTOR CAR - 2000 - WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 015988

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP-AAE-3827 BAJAJ-RE-205- THREE WHEELER - 2012 - RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 015979

YI- 1 470 BAJAJ 2010, THREE WHEELER அதி யுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 015816

**Repeat Your ad For Better Offers**






## பெறுகை அறிவித்தல்
## தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்
## வெலிசர, ராகம

வெலிசர, தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பிராந்திய கேள்விக் குழுவினால் பின்வரும் வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | வழங்கல் | மீளளிக்கப்படாத விலைக்கோரல் பிணை முறி | தகுதித் தன்மை |
|---|---|---|---|
| 01 | தொழுநோய் வைத்தியசாலையின் 01ஆம் இலக்க வார்ட்டிற்கு இணைவாக கிறிஸ்துராஜ வித்தியாலயத்தை பிரிப்பதற்கு மதிலொன்றை நிர்மாணித்தல் | ரூபா 60,000.00 | C-8 & 7 |

01. மீளளிக்கப்படாத 2500.00 ரூபா தொகையை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு செலுத்தியதன் பின் 2024-03-06ஆம் திகதி முதல் 2024-03-31ஆம் திகதி வரையில் தேவையான விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. பூர்த்தி செய்யப்பட்ட முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-03-28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நிறுவனத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அனுமதிபெற்ற பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
03. விலைக்கோரல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை நிறுவனப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம், வெலிசர.**
**தொ. இல. 0112-958658/0112-958734**



## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் குளிரூட்டி பாராமரிப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைக்கான கேள்வி கோரல் – 2024

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல. | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH KOC/03/02/ SA/24/AC | Maintenance & services of Air Conditioner 121 Nos | Business Registration & CIDA Registration EM5 or above | 50,000.00 | 22.05.2024 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 06.03.2024ஆம் திகதியிலிருந்து 19.03.2024ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 20.03.2024ம் திகதியன்று முப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர் பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல. 0212285329, 0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (22.05.2024) வரையும் செல்லுபடியாகும்.
7. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 13.03.2024ஆந் திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்**
**பெறுகைகள் குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வரையறுக்கப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## இல.120, உள் துறைமுக வீதி, திருகோணமலை

1. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இல் பதிவைக் கொண்டுள்ள தகைமையான விலைமனுதாரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிடப்படும் வேலைகளுக்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களை உதவிக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB) ஊடாக விலைமனுக்கள் நடத்தப்படும்.
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் அட்டவணையில் குறிப்பிடுமாறு தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இன் கீழ் கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
4. வரையறுக்கப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகத்தில் செலுத்தப்பட்ட கீழே குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணத்தை வெலுத்தியமைக்கான சான்றாக பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் வரையறுக்கப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (லிமிட்டட்) இல் 2024.03.26 பி.ப 3.00 மணிவரை அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
5. நகல்களுடனான விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள ஓர் விலைமனுதாரருக்கு முடியும். சேகரிப்பதற்கு முன்பே இலவசமாக விலைமனு ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பரிசீலிக்கலாம். விரும்பினால் வரையறுக்கப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. 2024.03.27 பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்பு வரையறுக்கப்பட்ட திருகோணமலை ப.நோ.கூ.ச. உதவிக் குழு, தலைவரை அடையுமாறு கீழே குறிப்பிடப்படும் தொகைக்கு ஓர் விலைமனுப் பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். விலைமனுக்கள் சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்னர் உடனடியாக திருகோணமலை, உள் துறைமுக வீதி, இல.120, வரையறுக்கப்பட்ட திருகோணமலை ப.நோ.கூ.சங்கத்தில் திறக்கப்படும் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுவுக்கு முன்னரான ஓர் கூட்டம் திருகோணமலை, உள் துறைமுக வீதி, இல. 120, வரையறுக்கப்பட்ட திருகோணமலை ப.நோ.கூ.சங்கத்தில் 2024.03.20 மு.ப. 10.00 மணிக்கு நடத்தப்படும்.
8. ஒப்பந்தங்கள் வழங்கலில் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்.

| வேலையின் பெயர் | தேவைப்படும் CIDA தரம் மற்றும் விசேடம் | VAT நீங்கலாக நிர்மாண செலவு (ரூபா) | ஒப்பந்த காலம் | விலைமனு செல்லுபடி காலம் | விலைமனுப்பிணை | | விலைமனு ஆவணத்தின் விலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (ரூபா) | செல்லு படியாதல் | |
| திருகோணமலை பிரதான வீதி இல.01, இலங்கை நிரப்பு நிலையத்திற்கு இலங்கை மண்ணெண்ணெய்க்கு தற்போதுள்ள 3000/G தாங்கியை அகற்றிவிட்டு 01 எண்ணிக்கையான 5000 கலன் நிலக்கீழ் தாங்கியை நிறுவுதல் | C08 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2.89 MM | 01 மாதம் | 2024.05.29 வரை 63 நாட்கள் | 30,000.00 | 2024.06.26 வரை | 1500.00 |

**பொது முகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**06.03.2024**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

# விலைமனுக்கோரல் (IFB)

## 75 எண்ணிக்கையிலான மேசை கணினிகளை (Desktop Computers) வழங்கல் மற்றும் பராமரித்தல்
## IFB இலக்கம் : DRP/ACC/07/02/2024

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு **75 எண்ணிக்கையிலான மேசை கணினிகளை (Desktop Computers) வழங்க மற்றும் பராமரிப்பதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB)

03. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் **0115226172** மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப்பிரிவில், **"சி" பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் **(www.drp.lk)** மூலமாக **2024.03.06** முதல் **2024.03.26** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.03.06** ஆம் திகதியிலிருந்து **2024.03.26** ஆம் திகதி **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் "சி" பகுதி, 12 வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக (ரூ.5,000.00)** மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல் மற்றும் நகல்) 2024.03.27** ஆம் திகதி **பி.ப.02.00** மணித்தியாலங்களுக்கு முன் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "சி" பகுதி, 12 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 91 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06 மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட **ரூ. மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் (324,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தலைவர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
**12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

SELACINE

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
**முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு**

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்கோரல்

## பெல்வத்த சீனி தொழிற்சாலைக்கு MS Plate வழங்குவதற்காக தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் (PR-2249)

இலங்கை, பெலவத்த சீனி தொழிற்சாலைக்கு **MS Plate வழங்குவதற்காக** ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கீழ்க் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் **US$ 40 அல்லது LKR 12,500.00 (தலைமை மனுதாரரின் உள்ளூர் முகவர்)** மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி **2024.04.15** ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி **9.00 மணி முதல் 15.00** மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையத்தளத்தில் **(www.lankasugar.lk)** அல்லது பெருந்தோட்ட அமைச்சின் இணையத்தளத்தில் **(www.mip.gov.lk)** அல்லது **(www.mfa.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். மேலும் விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

| விபரம் | LKR வங்கி கணக்கு |
|---|---|
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலாகிரிய |
| கணக்கின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| கணக்கு இலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. **தேவையான உருப்படி:**
   **மனு ஆவணத்தினை பார்க்கவும்**
3. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்களை **2024.04.16** ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி **14.00** மணி தாமதிக்காது **தலைவர், திணைக்களத்தின் கொள்முதல் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04, இலங்கை** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"MS Plate க்காக மேலதிக பாகங்களை வழங்குவதற்கான விலைமனு"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையின்றி பணமாக்கக்கூடிய **மனுப் பாதுகாப்பு தொகையுடன் US$ 2,390.00 அல்லது LKR 750,000.00** (தலைமை மனுதாரரின் **உள்ளூர் முகவர்)** இணைத்திருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **119 நாட்களுக்கு** செல்லுபடியாகும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 11 2 584 184** கைத்தொலைபேசி **: + 94 77 010 3359,** தொலைநகல் : **+94 11 2500674,** மின்னஞ்சல் **: sapumal@lscl.lk).**

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SELACINE

---

**மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## Procurement of 400,000 Nos. of Pre Printed Polycarbonate Blank Card for Print Smart Card Driving License

**Contract No.: DMT/H/ACC/24/06/2024**

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த நோக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (இ.ரூபாவில்) | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் (இ.ரூபாவில்) | விலைமனுத் தொகை (இ.ரூபாவில்) |
|---|---|---|---|
| Procurement of Pre-printed Polycarbonate Blank Card for Print Smart Card Driving License | 180,000,000.00 | 25,000.00 | 1,800,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
3. விலைமனுதாரர் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வியாபார பெயர் நியதிச்சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கம்பனியொன்றின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பணிப்பாளர்களின் சட்ட விபரங்களின் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவின் மூலப்பிரதியையும் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறும் தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - o மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் அல்லது வேறேதாவது அரசாங்க நிறுவனமொன்றினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
   - o 2007 ஆம் ஆண்டின் இலங்கையின் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாகவிருத்தல் வேண்டும்.

   ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை மோபோதி இன் பெறுகைக்கான கணக்காளரிடமிருந்து பெற்று நாராஹேன்பிட்ட, மோட்டார் போக்குவரத்து திணைக்கள பெறுகைக் கிளையில் விலைமனுக்கோரல் ஆவணத்தை 2024 மார்ச் 06 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச் 26 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் (பொது மற்றும் வங்கி விடுமுறைகள் நீங்கலாக) மு. ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி/4 மணி வரையும் பரீட்சிக்கலாம் (தொலைபேசி இலக்கம்: 011 2674846)
5. 2024 மார்ச் 06 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச் 26 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெறுகைக்கான கணக்காளருக்கு நிறுவன தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) என இரு பிரதிகளில் 2024 மார்ச் 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக அவற்றை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர், நாராஹேன்பிட்ட, மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்றுள்ள பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். சமுகமளிப்பதற்கு ஆர்வமுள்ள பிரதிநிதிகள் உற்பத்தி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்ட அதிகாரம் வழங்கப்பட்ட கடிதத்தை பெறுகைக்கான கணக்காளருக்கு அனுப்புதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2024 ஜூன் 27 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. 2024 மார்ச் 18 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு நாராஹேன்பிட்ட, மோட்டார் போக்குவரத்து திணைக்கள கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
9. மோட்டார் போக்குவரத்து திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதுடன் காலத்திற்கு காலம் வழங்கப்படும் நிதியிடல் ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு எந்தவொரு மாற்றங்களை மேற்கொள்வதற்கான உரிமையை பெறுனர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மோட்டார் போக்குவரத்து திணைக்களம்.**

SELACINE

# 1964 இலக்கம் 28ன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. :- LA/2023/HW/270**
**Miri/DS/L/510282/(2/8)472**

**காணி அமைச்சின் குறிப்பு இல. :- 4-3/7/2021/HW/270**
**4-3/7/2020/HW/213**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2024.01.19 ஆம் திகதிய 2367/18ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : மீரிகமை

| ஆ. வ. இலக்கம் / கடத்திரல் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 510220/01/24 | 01 | 0.0001 | பல்லெவெல | இல. 29ஏ, பல்லெவெல |
| 510233/02/5 | 35 | 1.0342 | மிதெல்லவெல | இல. 29, மிதெல்லவெல |
| 510282/02/10 | 02 | 0.0020 | வந்துரவ | இல. 337, வந்துரவ |

**டப்ளிவ். பி. பிரசாத் இந்திக**
**பிரதேச செயலாளர்**
**மீரிகமை.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**மீரிகமை.**
**2024.03.01**

---

# VACANCIES

## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA

The University of Vavuniya will entertain applications from suitably qualified Sri Lankan citizens for the following posts.

1. **FACULTY OF BUSINESS STUDIES**
   a) **Department of Marketing Management**
   Senior Lecturer Gr I / Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Marketing Management
   b) **Department of Human Resource Management**
   Senior Lecturer Gr I / Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Human Resource Management
   c) **Department of Business Economics**
   Senior Lecturer Gr I / Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Business Economics

**Note :**
Preference will be given to those who have additional knowledge in Environmental Economics and Monetary Economics

   d) **Department of Project Management**
   Senior Lecturer Gr I / Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Project Management

**Note :**
1. Preference will be given to those who have special degree in Project Management or any relevant degree in one or more of the following fields
   - Business Process Management / Strategic Management / Operations Management / Procurement Management
2. If no suitable candidates have applied for the above posts, candidates who have relevant Professional Qualifications will be considered for such appointments under Contract / Assignment basis.

3. **FACULTY OF TECHNOLOGICAL STUDIES**

**Department of ICT**
Senior Lecturer Gr I/ Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Information and Communication Technology

**Note :**
Preference will be given to those who have strong background in Cyber Security, Embedded System Technologies, Data Technologies, Software Engineering and Multimedia Technologies

**QUALIFICATIONS :**
Qualification Guidelines could be downloaded from university website: **http://www.vau.ac.lk**

**REMUNERATION AND OTHER BENEFITS :**

| Posts | Salary Code | Salary Scale from 01.01.2020 | Academic Allowance |
|---|---|---|---|
| Senior Lecturer Gr.I | U-AC 3 (I) | Rs.91,310-7x2170-106,500 p.m | 176% |
| Senior Lecturer Gr.II | U-AC 3(II) | Rs.79,360-11x1630-97,290 p.m | 176% |
| Lecturer (Unconfirmed) | U-AC 3 (III) | Rs.69,580-5x1630-77,730 p.m | 156% |
| Lecturer(Probationary) | U-AC 3 (IV) | Rs.54,600-10x1335-67,950 p.m | 140% |

Research Allowance – 35% (Payable to the Academic Staff based on the research activity)
Additional Monthly Allowance – 20%
Cost of Living Allowance – Rs.12,800/-p.m.
Monthly Allowance – Rs.5,000/-p.m

**STATUTORY BENEFITS :**
- Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
- Membership in Universities Provident Fund.
- Membership in Pension Scheme in the University System, Gratuity payments, Employees' Trust Fund benefits.
- Free Medical Services.

**METHOD OF RECRUITMENT :** By structured interview

**CLOSING DATE :** Application should reach us on or before: **28.03.2024.**

Applications shall be sent to the **Deputy Registrar, Establishments, University of Vavuniya, Pambaimadu, Vavuniya** with photocopies of the educational & professional qualifications (with statement of the Degrees and service certificates). **In addition, the receipt of the registered post and scanned copy of the application as pdf file should be sent by e-mail on or before the closing date to the email address: recruitments@vau.ac.lk**

***Required qualification, Salary and other benefits, application form and other details*** are also available in the University website **http://www.vau.ac.lk** Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the **Bank of Ceylon, Account No: 2364602 in favour of Bursar, University of Vavuniya.**

Candidates who apply for **more than one post should submit separate application form with separate Bank Slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Boards should channel their applications through the Heads of the respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only shortlisted applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF VAVUNIYA**
05.03.2024

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்கோரல்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக மூலப்பொருட்களை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   **RDA/GAM/CE/TEN/2024/13 -** போபத்த, சீகிரி மாவத்தையின் மீதமுள்ள பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல் (மீதமுள்ள அளவு)

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

---

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

## கம்பஹாவிலுள்ள மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதிக்கான மேம்படுத்தல்கள் – வெளியக வேலைகள்

**CONTRACT No.: DSD/PRO/03/01/08-2024**

கீழே விபரிக்கப்பட்டவாறு கம்பஹாவிலுள்ள மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதிக்கான மேம்படுத்தல்கள் - வெளியக வேலைகள் - (Contract No.: DSD/PRO/03/01/08-2024) இற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்காக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

1. இப்பணியானது பின்வரும் வேலைகளை அடக்குகின்றது.
   - அகழ்தல், கொங்கிறீட் பதித்தல், சரளைக்கல் வேலை, பெயிண்ட் பூசுதல், சங்கிலி தொடர்பு வேலி மற்றும் நடைபாதைகள்
   - மின்னியல் மற்றும் குழாய் இணைத்தல் வேலைகள்

   நிர்மாணக் கால எல்லையானது 180 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்த வேலைக்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.

   3(அ) ஒப்பந்தக்காரர்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தின் கீழ் சி-5 மற்றும் ஈஎம்4 ஆகிய தரங்களில் கட்டிட நிர்மாணம் மற்றும் மின்னியல் இணைப்புக்களில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   3(ஆ) ஒப்பந்தக்காரர் கடந்த ஐந்து வருடங்களில் இதன் பெறுமதி மற்றும் சிக்கல் தன்மையில் ஆகக் குறைந்தது இரு செயற்றிட்டங்களை சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பொறியியல் சேவைகளுக்காக பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 0112677960) கீழேயுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   2024.03.06 ஆம் திகதியிலிருந்து 2024.03.27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப்பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு 2024.03.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
6. விலைமனுக்களின் செல்லுபடியாகும் கால எல்லையானது அவைகளின் மூடும் திகதியிலிருந்து 91 நாட்களாகும்.
7. அனைத்து விலைமனுக்களும் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான (600,000 ரூபா) விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் கால எல்லையானது அதனது மூடும் திகதியிலிருந்து 119 நாட்களாகும்.
8. 2024.03.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கம்பஹா மாவட்ட விளையாட்டுக் கட்டித்தொகுதியில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

   மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு,

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 0112677960**

---

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK

Funded by The European Union

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல் – விலைமனுக்களை மூடும் திகதியை பிற்போடல்

1. பின்வரும் பெறுகைகளின் விலைமனுக்களை மூடும் நேரமானது 2024 மார்ச் 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

   **LK-MOA-PMU-364766-CW-RFB –** மொனராகல மாவட்டத்தில் கவண்டிஷ் வாழைப்பழ சேகரிக்கும் நிலைய நிருமாணம்.

   **LK-MOA-PMU-366008-CW-RFB –** மொனராகல மாவட்டத்தில் மாம்பழ கொத்தணி செயற்பாட்டு நிலைய நிருமாணம்.
2. விலைமனுவானது அதனை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
3. விலைமனுவானது 2024 ஜூன் 17 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுப்பிணையானது 2024 ஜூன் 17 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. 2024 மார்ச் 12 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2, ஆம் இலக்கத்திலுள்ள விவசயாத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட கண்காணித்தல் பணிமனைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024 மார்ச் 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2, ஆம் இலக்கத்திலுள்ள விவசயாத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட கண்காணித்தல் பணிமனையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. 2024.01.28 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் வழங்கப்பட்ட ஏனைய அனைத்து தகவலில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**
**திகதி: 2024 மார்ச் 06.**

---

**Repeat Your Ad For Better Offers**

## பெயர் மாற்றம்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் நிசா மன்சில், தைக்கா வீதி, வாழைச்சேனை - 05 எனும் விலாசத்தில் வசிக்கும் பாத்திமா பர்ஸானா ஆகிய எனது பிறப்பு பதிவில் பாத்திமா ரிசானா என்று உள்ளது, ஆனால் எனது சகல ஆவணங்களிலும் பாத்திமா பர்ஸானா என்று உள்ளதாலும் உறவினர்கள் என்னை பாத்திமா பர்ஸானா என்று அழைப்பதாலும் எனது பிறப்பு பதிவில் பாத்திமா பர்ஸானா என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.
ஏ.எல்.பாத்திமா பர்ஸானா.

---

## அறிவித்தல் !

**பேராளர் மாநாடு**
**ஐக்கிய சமாதான கூட்டமைப்பு**

திகதி
**மார்ச் 09 சனிக்கிழமை, 2024**

நேரம் -
**பகல் 2:30 முதல் மாலை 5:30 வரை**

இடம் -
**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கேட்போர் கூடம், இல. 14, சுதந்திர வழி, கொழும்பு 07.**

**பஷீர் சேகு தாவூத்** தவிசாளர்
**எம்.டி.ஹசன் அலி** பொது செயலாளர்
**ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான்** பொருளாளர்

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு

---

# 1964 இலக்கம் 28ன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. : 3/2/3/10/275-719**
**காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/7/2019/HW/147**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.24 ஆம் திகதிய 2355/23 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : அத்தனகல்லை
கிராம நிலதாரி பிரிவு : பிரிவு இல. 327, தடகமுவ
கிராமத்தின் பெயர் : தடகமுவ
வரைபட இலக்கம் : க. வ. 510616, தொகுதி இல. 06, தாள் இல. 2
துண்டு இலக்கம் : 127,128,151 (துண்டுகள் 03)
விஸ்தீரணம் : 0.0819 ஹெக்டயார்

**எஸ். பி. குணவர்தன**
**பிரதேச செயலாளர்,**
**அத்தனகல்லை.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**அத்தனகல்லை.**
**2024.02.28**

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39(1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2017.12.11 ஆந் திகதிய 2049/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 307 ஆம் இலக்க 2017.11.22 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2017.12.11 ஆந் திகதிய 2049/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 307 ஆம் இலக்க 2017.11.22 ஆம் திகதிய இக்கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

எஸ்.எம்.சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல : 4-3/2/2017/CA/30
பிரதேச செயலாளரின் இல: RAT/LAN/10/F1/10
காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை,
பத்தரமுல்லை,
2021, டிசெம்பர் 08.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில், அத்திடிய தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.11.01 ஆம் திகதிய CO/RTM/2017/233 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட சுமார் 0.1716 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

1. துண்டு "A" - டி சொய்சா வத்தை - விஸ்தீரணம்: 0.1716 ஹெக்டயார்

வடக்கு : க.வ.521002 வலயம் 11 இல் துண்டு இல. 47, 48, 51, 52 மற்றும் 54; கிழக்கு : க.வ.521002 வலயம் 11 இல் துண்டு இல. 54, 56, 59 மற்றும் 60; தெற்கு: க.வ.521002 வலயம் 11 இல் துண்டு இல. 60, 61, 62, 63 மற்றும் 42; மேற்கு:க.வ.521002 வலயம் 11 இல் துண்டு இல. 42, 43, 44, 46 மற்றும் 47.

EOG 12-0237

---

**Marriage Proposals** in the **Sunday Observer** Is the best way to fulfil your Future Dreams

பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது டி20:

# முன்கூட்டியே தொடரை வெல்வதற்கு இலங்கை அணிக்கு இன்று வாய்ப்பு

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் பரபரப்பு வெற்றியீட்டிய இலங்கை அணி தொடரை முன்கூட்டியே கைப்பற்றும் எதிர்பார்ப்புடன் அதே சில்ஹட் (06) மைதானத்தில் இன்று (6) நடைபெறும் இரண்டாவது டி20 போட்டியில் களமிறங்கவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (04) நடைபெற்ற முதலாவது டி20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி அதிரடியாக ஆடி 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களை விளாசியது. ஆரம்ப வீரராக வந்த குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ர அதிரடி அரைச்சதம் பெற்ற நிலையில், பதில் அணித் தலைவரான சரித் அசலங்க 21 பந்துகளில் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களை பெற்றார்.




பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் அணியின் முதல் 3 விக்கெட்டுகளையும் 30 ஓட்டங்களில் வீழ்த்த முடிந்த போதும் மத்திய வரிசையில் மஹ மூதுல்லா (54) மற்றும் ஜாகிர் அலி (68) இருவரும் அபாரமாக துடுப்பெடுத்தாடினர்.

எனினும் கடைசி ஓவருக்கு 12 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோது பந்து வீச வந்த தசுன் ஷானக்க தனது அனுபவத்தை பயன்படுத்தி 2 விக்;கெட்டுகளை வீழ்த்தி எதிரணிக்கு 8 ஓட்டங்களையே விட்டுக்கொடுத்தார்.



இறுதியில் பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களை பெற்றது.

குறிப்பாக பனி காரணாக இரண்டாவதாக பந்துவீசுவது கடினமாக இருந்தது இலங்கை பந்துவீச்சாளர்களுக்கு பெரும் சவாலாக அமைந்தது.

இந்நிலையில் இன்றைய போட்டியும் அதே மைதானத்தில் நடைபெறும் சூழலில் நாணய சுழற்சி முக்கியமாக அமையும். முதல் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட நிலையில் இன்றைய போட்டியில் இலங்கை அதே அணியுடன் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

# டயலொக் அனுசரணையில் மாபெரும் கிரிக்கெட் சமர்கள்




இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, நாளை (07) ஆரம்பமாகும் 145 ஆவது நீலங்களின் சமர் 3 நாள் மாபெரும் கிரிக்கெட் போட்டிக்கு 19 ஆவது முறையாக அனுசரணை வழங்குகிறது.

கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரிகளுக்கு இடையிலான இந்தப் போட்டி கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. மார்ச் மாதத்தின் பாடசாலைகளுக்கு இடையிலான பாரம்பரிய கிரிக்கெட் போட்டிகளுக்கு டயலொக் தனது அனுசரணையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இதில் எதிர்வரும் மார்ச் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி மற்றும் கொழும்பு புனித பேதுரு கல்லூரி இடையிலான 90ஆவது 'புனிதர்களின் சமர்' மற்றும் நாளை (07) ஆரம்பமாகும் யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ். பரியோவான் கல்லூரிகளுக்கு இடையிலான 117 ஆவது வடக்கின் சமர் போட்டிக்கும் டயலொக் தனது ஆதரவை நீடித்துள்ளது.

அதேபோன்று எதிர்வரும் மார்ச் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள திரித்துவ கல்லூரி மற்றும் புனித அன்தோனியார் கல்லூரிகளுக்கு இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டிக்கும் டயலொக் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியனானது கெடேரியன்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபகர் முஹம்மது யமீன் ஏற்பாட்டில் நடைபெற்ற லெஜென்ட்ஸ் சுப்பர் லீக் கால்பந்தாட்ட தொடரில் கொழும்பு கெடேரியன் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் (2) நடைபெற்ற இறுதிப் போட்டியில் எவர் கிரீன் கழகத்தை எதிர்கொண்ட கெடேரியன் பெனால்டி சூட் அவுட் முறையில் வெற்றியீட்டியது.

இந்தத் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக எவர்கிரீன் அணியின் இந்திக மற்றும் சிறந்த தொடர் வீரராக கெடேரியன்ஸ் அணியின் நியாஸ் தெரிவாகினர்

# ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ண இறுதிப் போட்டி நாளை

**ருஸைக் பாரூக்**

ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியின் 80ஆவது குழுவினர் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியான ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணத்தின் மூன்றாம் இடத்துக்கான போட்டி மற்றும் இறுதிப் போட்டி நாளை (07) பிற்பகல் 4:00 மணி முதல் கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ளது




மூன்றாம் இடத்துக்கான போட்டி மாலை 4.00 மணிக்கு கேட்வே கல்லூரி எதிர் அல் ஹிலால் மத்திய கல்லூரிக்கு இடையே நடைபெறவிருப்பதோடு இறுதிப்போட்டி மாலை 6.30 மணிக்கு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி எதிர் புனித தோமஸ் கல்லூரிக்கு இடையே நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகவும், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த கௌரவ அதிதியாகவும், 1996 ஆம் ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணத்தை வென்று தந்த அணித் தலைவர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்,

இவ்விறுதிப்போட்டியானது சுகததாச மைதானத்தின் இரவு நேர ஒளி விளக்குகளின் கீழ் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகப் பணக்காரராக ஜெப் மீண்டும் முதலிடம்



உலகின் பணக்காரர் பட்டியலில் டெஸ்லா நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க்கை முந்தி அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். 2021ஆம் ஆண்டு உலகின் பணக்காரர் பட்டியலில் ஜெப் பெசோஸ் முதலிடத்தில் இருந்தார். 2023ஆம் ஆண்டு அவரை முந்தி எலான் மஸ்க் முதலிடம் பிடித்தார். இந்நிலையில் உலக பணக்காரர்கள் குறித்த புதிய பட்டியலை 'புளூம் பெர்க்' நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி, 200 பில்லியன் டொலர் சொத்துகளுடன் ஜெப் பெசோஸ் மீண்டும் முதலிடத்தில் உள்ளார். எலான் மஸ்க் 198 பில்லியன் டொலர்களுடன் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டார். ஒரு கட்டத்தில் எலான் மஸ்க்– பெசோஸ் இடையிலான சொத்து மதிப்பு வித்தியாசம் 142 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 197 பில்லியன் டொலர் சொத்துகளுடன் ஆடம்பர பொருட்கள் தயாரிக்கும் லூயி வுய்டன் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பெர்னார்ட் அர்னால்ட் 3ஆவது இடத்திலும் 179 பில்லியன் டொலர் சொத்துகளுடன் மெடா தலைவர் மார்க் சக்கர்பெர்க் 4ஆவது இடத்திலும், 150 பில்லியன் டொலர் சொத்துகளுடன் மைக்ரோசொப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

# சீனாவுடன் மாலைதீவு பாதுகாப்பு ஒப்பந்தம்



இந்திய துருப்புகளை வெளியேற உத்தரவிட்ட மாலைதீவு, சீனாவுடன் இராணுவ உதவி உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருப்பதாக அதிகாரிகள் நேற்று (05) தெரிவித்தனர்.

சீன ஆதரவு ஜனாதிபதி முஹமது முயிசு கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்ததை அடுத்து மாலைதீவில் நிலைகொண்டுள்ள இந்திய துருப்புகளை வெளியேற உத்தரவிட்டார். அதன்படி அங்கு நிலைகொண்டிருக்கும் சுமார் 89 இந்தியப் படையினர் வரும் மே 10 ஆம் திகதி வெளியேறவுள்ளனர்.

இந்நிலையில் சீனாவின் இராணுவ உதவியை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை மாலை கைச்சாத்திட்டதாக மாலைதீவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் இலவசமானது அல்லது கொடுப்பனவுகள் இல்லாத அல்லது கட்டணம் இல்லாததாக இருந்தது என்றும் அது கூறியது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் சீனாவுக்கு இராணுவ உதவிகளை இலவசமாக வழங்க சீனா இணங்கியுள்ளதாக மாலைதீவு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் கசான் முனுமூன், சீனாவின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்புகளுக்கான அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஸாங் பாவோகுன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கடந்த செப்டெம்பரில் இடம்பெற்ற தேர்தலில் முயிசு ஜனாதிபதியாக தெரிவானது தொடக்கம் இந்தியா மற்றும் மாலைதீவுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

ரமழான் மாதத்திற்கு முன்:

# காசா போர் நிறுத்தத்திற்கான இராஜதந்திர முயற்சி தீவிரம்

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் நீடித்ததோடு எதிர்வரும் புனித ரமழான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் பேச்சுவார்த்தைகள் எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று (05) மூன்றாவது நாளாகவும் நீடித்தது.

வடக்கு காசாவுக்கு உதவிகள் செல்வது இஸ்ரேலிய படையால் முடக்கப்பட்டிருக்கும் சூழலில் அங்கு குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதம் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு வாரத்துக்கும் குறைவான காலமே உள்ள நிலையிலேயே சர்வதேச மத்தியஸ்தர்கள் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் கெய்ரோவில் கூடியுள்ளனர்.

இதில் ஆறு வாரம் போர் நிறுத்தம் மற்றும் தொடர்ந்து பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்கும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கே முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும் ரமழானுக்கு முன் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு இராஜதந்திர அழுத்தங்கள் அதிகரித்தபோதும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து இஸ்ரேலிய பிரதிநிதிகள் விலகியுள்ளனர்.

உயிருடன் இருக்கும் பணயக்கைதிகளின் பெயர் பட்டியலை வெளியிட ஹமாஸ் மறுத்ததை அடுத்து இஸ்ரேல் இந்தப் பேச்சுவார்த்தைகளை புறக்கணித்திருப்பதாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் இஸ்ரேலுடன் தொடர்பில் இருப்பதாக எகிப்து பாதுகாப்பு வட்டாரங்கள் கடந்த திங்களன்று கூறி இருந்தன.

எனினும் பணயக்கைதிகள் பற்றிய விபரங்கள் 'பேச்சுவார்த்தை செயல்பாட்டின் போது வெளியிடப்பட்ட எந்த ஆவணங்களிலும் அல்லது திட்டங்களிலும் குறிப்பிடப்படவில்லை' என்று ஹமாஸ் மூத்த தலைவரான பஸம் நயிம் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'(இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின்) நெதன்யாகு உடன்பாடு ஒன்றை எட்ட விரும்பாத நிலையில் பந்து தற்போது அமெரிக்காவின் பக்கம் உள்ளது' என்றும் பஸம் நயிம் குறிப்பிட்டார்.

ஆனால் இஸ்ரேல் அங்கீகரித்த உடன்படிக்கை ஏற்கனவே கைவசம் இருப்பதாகவும் அது ஹமாஸின் ஒப்புதலிலேயே தங்கி இருப்பதாகவும் அமெரிக்கா கூறி



வருகிறது. இதனை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இடம்பெற்ற பலஸ்தீன போராளிகளின் தாக்குதலின்போது கடத்தப்பட்ட சுமார் 250 பணயக்கைதிகளில் தொடர்ந்து 130 பேர் காசாவில் இருப்பதாக இஸ்ரேல் நம்புகிறது. எனினும் இவர்களில் 31 பேர் உயிரிழந்திருப்பதாக அது கூறுகிறது.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் சூழலில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 97 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 123 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்மூலம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30,631 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 72,043 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் கான் யூனிஸ் நகரில் கடந்த திங்கட்கிழமை இரவு இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் பக்காவின் குடும்பத்தின் 17 உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதில் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை வடக்கு காசாவில் உள்ள இரு மருத்துவமனைகளுக்கு சென்ற உதவிக் குழுக்கள், உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளின் பற்றாக்குறைக்கு மத்தியில் அங்கு குழந்தைகள் பட்டினியில் உயிரிழக்கும் மோசமான நிலையை கண்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

'போதுமான உணவு இல்லாததால் 10 குழந்தைகள் உயிரிழந்துள்ளன' என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார். கடந்த வார இறுதியில் உலக சுகாதார அமைப்பின் குழுவொன்று அல் அவ்தா மற்றும் கமால் அத்வான் மருத்துவமனைகளுக்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கமால் அத்வான் மருத்துவமனையில் ஊட்டச்சத்து குறைபாடும் மற்றும் நீரிழப்பு காரணமாக குறைந்தது 15 குழந்தைகள் இறந்ததாக காசா சுகாதார அமைச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தது. அதேபோன்று தெற்கு நகரான ரபாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் பதினாறு குழந்தைகள் இறந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. இந்நிலையில் அடுத்த மாதத்தில் காசாவில் பிறக்கவுள்ள குறைந்தது 5,500 குழந்தைகள் உயிரிழக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தக் குழந்தைகளின் தாய்மார் குண்டுவீச்சுகள் மற்றும் இடம்பெயர்வுகள் காரணமாக மகப்பேறு மற்றும் பிரசவத்திற்கு முந்திய சோதனைகளை செய்ய முடியாதிருப்பதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

தெற்கு காசாவில் கான் யூனிஸ் நகரில் அண்மைய நாட்களாக உக்கிர மோதல் இடம்பெற்று வருகிறது. அங்கு விதிகளில் அழுகிய நிலையில் உடல்கள் இருப்பதாகவும் வரிசையாக வீடுகள் மற்றும் கடைகள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் விபரித்துள்ளனர்.

'நாம் உண்டு வாழ விரும்புகிறோம். எமது வீடுகளை பாருங்கள். இந்த வறிய நாட்டில் எந்த ஒரு வருமானமும் இல்லாத நிராயுதபாணியான ஒருவரை எவ்வாறு குற்றம்சாட்ட முடியும்?' என்று இடிபாடுகளை காண்பித்தபடி நாதர் அபூஷனப் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 6ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2024-03-06

**பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைச் சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| **01** | நுவரெலியா விடுமுறை பங்களாவிற்கு உத்தேச வேலியை நிர்மாணித்தல் மற்றும் படலையைப் பொருத்துதல்<br>ஒப்பந்த இல: **C/P&D/WORK/CBF/NUWARAELIYA-CIRCUIT-BUNGALOW/2024/02** | 12,500/-+ VAT ** | ரூபா 60,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 13.9 மில்லியன் | கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 20/03/2024<br>பி.ப. 2.00 |
| **02** | வவுனியாவில் உள்ள மரவன்குளம் PH ஐ இல் விநியோக வழிகளை பூர்த்தி செய்வதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/LAYING -HDPE-MARAVANKULAM/2024/018** | 12,500/-+ VAT ** | ரூபா 130,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.10 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 13/03/2024<br>பி.ப. 2.00 |
| **03** | முல்லைத்தீவு நகர நீர் வழங்கல் திட்டத்தில் Roughing வடிகட்டிக்கு கூரையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/CONSTRUCTION OF ROOF FOR ROUGHING FILTER AT MULLAITHIVU URBAN/2023/129** | 4,000/-+ VAT ** | ரூபா 50,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 4.85 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 20/03/2024<br>பி.ப. 2.00 |
| **04** | அம்பகஸ்தோவ நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள சேவை இணைப்புகளின் திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/ AMBAGASDOWA/2024/14** | 12,500/-+ VAT ** | ரூபா 235,250/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.67 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 20/03/2024<br>பி.ப. 2.00 |
| **05** | வெலிமட நீர் வழங்கல் திட்டத்திலுள்ள உள்ளீர்ப்பின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் வெலிமட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை மேம்படுத்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ WELIMADA/2023/14R** | 12,500/-+ VAT ** | ரூபா 176,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 11.70 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 20/03/2024<br>பி.ப. 2.00 |
| | 2024-01-31ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. கல்நேவ நீர் வழங்கல் திட்டம் - திஸ்ஸவெவ பெகேஜ் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியைக் கழற்றி அப்புறப்படுத்தி போக்குவரத்து செய்து கல்நேவ நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் நிறுவுதல் மற்றும் புனரமைத்தல் ஒப்பந்த இல: NWSDB/NC/CEDE/A4-47/GOSL/2023/05 - தகுதித் தேவைப்பாடுகள் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4, C5 அல்லது C6 தரத்தில் அல்லது மின்சாரம் மற்றும் பொறிமுறை சேவைகள் (EM) - உப விசேடத்துவமாக கனமான உருக்கு கட்டமைப்பில் (HSF) EM-2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் என மாற்றப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும். | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| **06** | மேற்கு - தெற்கு பிராந்தியத்திற்கு WoltmanType தொகை நீர் மானிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல:**W-S/P&C/S/BM(01)/DGM/O&M/2023/97** | 12,500/-+ VAT ** | ரூபா 171,000/- | WoltmanType தொகை நீர் மானிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 21/03/2024<br>மு.ப. 10.00 |
